வாராந்த சஞ்சிகை
# சுடர் ஒளி
ஜீலை 29 - ஓகஸ்ட் 04, 2015
பக்கம் 24
விலை 30/-



# மணி மூள் முடியும்

1717 FOLLOW US www.mobitel.lk
LIFE இன் SPEED இற்கு செட்டாகும் INTERNET
மொபிடெல் இன்டர்நெட்
அதிவேகமான இன்டர்நெட் அனுபவம் உங்களுக்காகவே
2.5GB - ரூ.279
4.5GB - ரூ.399
(மு.ப. 09:00 - பி.ப. 11:59) -2GB | (மு.ப. 12:00 - மு.ப. 08:59) - 2.5GB
D399 என குறிப்பிட்டு 7678 க்கு SMS செய்க
8GB - ரூ.699
(மு.ப. 09:00 - பி.ப. 11:59) - 4GB | (மு.ப. 12:00 - மு.ப. 08:59) - 4GB
D699 என குறிப்பிட்டு 7678 க்கு SMS செய்க
12GB - ரூ.999
28GB - ரூ.1,999
(மு.ப. 09:00 - பி.ப. 11:59) - 14GB | (மு.ப. 12:00 - மு.ப. 08:59) - 14GB
D1999 என குறிப்பிட்டு 7678 க்கு SMS செய்க
TRC/M/Promo/14/01 - 05 நிபந்தனைகள் உண்டு.
4G
Sri Lanka Telecom Mobitel

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிசயமானபெண் மம்மி



500 வருடத்திற்கு முந்தைய பெண் மம்மி அர்ஜென்டினாவின் ப் ¿llullaillaco) என்ற எரிமலை பகுதியில் உள்ள குகையில் ஒன்றிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டு உள்ளது. இந்த பெண் மம்மி உயிர்த்தியாகம் செய்த ஒரு பெண்ணின் மம்மியாகும். இதில் ஆச்சரியம் என்னவென்றால் இதைப் பார்த்தால் இது 500 வருடத்திற்கு முன் இறந்துபோன பெண்ணின் மம்மியாக தெரியவில்லை. கடந்த வாரம் இறந்துபோன ஒரு பெண்ணைபோல மம்மி உருவம் மெருகு குலையாமல் உள்ளது. மம்மியைப் பார்க்கும்போது பெண் நிஜத்தில் உயிருடன் இருப்ப து போல் ஒரு தோற்றம் உள்ளது. அது கை ஊன்றி இருக்கும் விதத்தை பார்க்க ஆச்சரியமா க உள்ளது.

இந்த மம்மி தொல் பொருள் ஆய்வாளர் ஜோகன் ரெயின்கார்டு குழு மூலம் கண்டுபிடிக் கப்பட்டு உள்ளது. பண்டைய காலங்களில் 'கபகோச்சா' என்ற திரு விழாவின் மூலம் குழந்தை களைத் தேர்வு செய்து உயிர்த்தியாகம் செய்யும் திருவிழா நடந்துவதுண்டு. இந்த விழாவின்மூலம் உயிர் தியாகத்திற்கு தேர்வு செய்யப் படும் 'இன்கா' குழந்தைகள் என அழைக்கப்பட்டனர்.

ஆனால் மம்மியை ஆய்வு செய்த டாக்டர்கள் இறக்கும் போது இந்தப் பெண், நுரையீரல் நோயினால் அவதிப்பட்டதாகக் கூறி உள்ளனர். இந்த மம்மி மூலம் பழங்கால த்தில் எந்தவிதமான நோய்கள் இருந்தன எனபதை அறியலாம் என டாக்டர்கள் கூறி உள்ளனர்.



# உலகநாடுகளை அதிர வைத்த இயற்கைச் சம்பவம் இது!



உலகில் உள்ள ஏதேனும் ஒரு பகுதியில் ஏதாவது ஒரு இயற்கை மாற்றம் நிகழ்ந்து கொண்டேதான் இருக்கின்றது. இது மனித அறிவுக்கு எட்டாததா கவும் உள்ளது. ஆம்! சமீபத்தில்

ரஷ்யாவில் ஏற்பட்ட திடீர் இயற்கை சம்பவத்தால் அந்நாடு மட்டுமல்ல உலகநாடுகளையே அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது.

ரஷ்யாவில் உள்ள சைபீரிய பகுதியில் திடீரென மிகப்பெரிய பள்ளம் தோன்றியுள்ளது. இப்பள்ளம் 262 அடிகள் அதாவது 80 மீற்றர் அகலம் கொண்டதாக உள்ளது. இதனால் விஞ்ஞானிகள் பெரும் அதிர்ச்சிக்குள்ளாகி யுள்ளனர். மேலும் இந்தத் திடீர் பள்ளத்தின் ஆழம் எவ்வளவு என்பது பற்றிய விவரம் ஏதும் அறியப்படவில்லை.

இந்தப்பள்ளம் உலகின்முடிவு (End of the world) என மூதாதையர்களினால் பெயர் குறிக்கப்பட்ட பகுதியில் ஏற்பட்டிருப்பது மேலும் பல்வேறு சந்தேகங்களை எழுப்பியுள்ளது. நிலக்கீழ் வெடிப்பு காரணமா? அல்லது வேறு ஏதேனும் இயற்கை சீற்றமா? அல்லது பூமியின் கீழுள்ள வாயு வெடிப்பா? என்பன போன்ற பல கோணங்களில் ஆராய பல ரஷ்ய விஞ்ஞானிகள் அடங்கிய குழுவொன்று அங்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

மேலும் உலகநாடுகளிலிருந்து விஞ்ஞானிகள் இங்குசென்று ஆய்வுகள் மேற்கொள்ளவிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த ஆய்வின் முடிவில் புவியியல் தொடர்பான தகவல்களில் பெரும் மாற்றம் ஏற்பட லாம் என்றும் விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரவை வேட்பாளர்கள்

- ஆசாத்

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றுவிதமான வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். ஒவ்வொரு தரப்பினரும் கொள்கைகளையும், வாக்குறுதிகளையும் வானோங்க உரத்து, வெளியிட்ட போதும், வெளியே சொல்லப்படாத அடிப்படை நோக்கங்களைக் கொண்டிருப்பதையும் கடந்த கால அனுபவங்கள் புலப்படுத்தியுள்ளன.



முதலாவது ..... ஏதாவது ஒருகட்சியில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யும்படி கோரித் தேர்தலில் போட்டியிடுவார்கள். இவர்களின் கட்சி நாடாளுமன்றத்தில் இவர்கள் சார்ந்த கட்சி பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்று அரசாங்கம் அமைத்தால் இவர்களில் சிலர் அமைச்சர்களாக வரும் வாய்ப்பு ஏற்படும்.

இரண்டாவது ரகத்தினர் எந்தக் கட்சியிலும் சேராமல் சுயேட்சயையாகப் போட்டியிடுபவர்கள். இலங்கையின் தேர்தல் வரலாற்றில் இந்த சுயேட்சை வேட்பாளர்கள் வெற்றி பெறுவது மிகவும் அரிதாகவே காணப்படுகிறது. இவர்களின் சிலர் ஒரு தரப்பின் வெற்றிவாய்ப்புக்களைக் குழப்ப எதிர்த்தரப்பால் சில சமயம் நியமிக்கப்படுவதுண்டு. இந்தப் பட்டியலில் சிறிய கட்சிகளையும் உள்ளடக்கலாம். இவர்களில் எவராவது வெற்றிபெற்றால் ஏதோ ஒரு தரப்புடன் இணைந்து கொள்வதுண்டு.

அடுத்த மூன்றாவது தரப்பினர் தமக்கெனக் கட்சிகளைக் கொண்டிருந்தபோதும் தேர்தல் காலங்களில் வெவ்வேறு கொள்கைகளை முன்வைத்தும், எதிர்த்தரப்பினரைத் தாக்கியும் பெரும் பரப்புரைகளை மேற்கொண்ட போதிலும் இவர்களுக்கு ஒரு முக்கியமான பொதுக்கொள்கையுண்டு. அதாவது அமைச்சர்களாகப் பதவி பெறுவதே இவர்களின் உறுதியான அசைக்கமுடியாத கொள்கையாகும்.

தேர்தல் காலங்களில் இவர்கள் பல கொள்கைப் பிரகடனங்களையும் ,வாக்குறுதிகளையும் வெளியிட்டபோதும் தேர்தல் முடிந்து வெற்றிபெற்றால் அமைச்சர் பதவி அடைவதற்காக எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அதனோடு இணைந்து கொள்வார்கள். தாங்கள் வெளியிட்ட கொள்கையெல்லாம் மூட்டை கட்டி மூலையில் போட்டு விட்டு தாம் இணைந்து கொண்ட அரசாங்கத்தின் முகவர்களாக மாறி விடுவார்கள். தாம் ஏற்கும் அமைச்சுப் பதவிகள் மூலம் தம்மைத் தெரிவு செய்த மக்களுக்குச் சேவை செய்ய முடியுமா என்பது பற்றியெல்லாம் கவலைப்படுவது இல்லை. ஏதோ ஒரு அமைச்சுப் பதவி கிடைத்தாலே அதனுடன் திருப்தி அடைந்து விடுவார்கள்.

இலங்கை அரசியலில் மூன்றாவது ரகத்தினராக ஒரு சிலர் எந்த ஆட்சி வந்தாலும் அமைச்சர்களாக நிலைத்திருக்கின்றனர்.

இவர்களில் மலையகத்தில் ஆறுமுகம் தொண்டமான், முஸ்லிம் மக்களின் அரசியலில் ரிசாட் பதியுதீன், வடபகுதி அரசியலில் முன்னாள் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களிடையே கூட டக்களஸ் தேவானந்தாவுக்கு அதிகமான தலைவர்களின் கீழ் அமைச்சராகப் பதவி வகித்த பெருமை உண்டு. அவர் பிரேமதாஸா, திருமதி சந்திரிகா விஜயகுமாரணதுங்க, ரணில் விக்கிரமசிங்க, மகிந்த ராஜபக்ஷ என வெவ்வேறு முரண்பட்ட கொள்கைகளைக் கொண்ட தலைவர்களின் அமைச்சரவைகளில் பங்கு கொண்டு அமைச்சுப் பதவிகளை வகித்து வந்துள்ளார்.

அவர் இந்த முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட போதிலும் அவரின் இலக்கு ஒருஅமைச்சர் பதவியைப் பெறுவதுதான் என்பதில் சந்தேகமிருக்க முடியாது. எனவே அவரை நாடாளுமன்ற வேட்பாளர் என்பதை விட அமைச்சரவை வேட்பாளர் பட்டியலில் இணைப்பதே பொருத்தமாக அமையும்.

அவர் அதற்கேற்ற வகையில் தேர்தல் களத்திலேயே தனது இலட்சியத்தை நிறைவேற்றுவதை நோக்கமாகக் கொண்ட தயாரிப்புகளை ஆரம்பித்து விட்டார்.

அவர் ஆரம்பகாலத்தில் மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்ற கோஷத்துடன் வீணைச்சின்னத்தில் தேர்தல்களில் இறங்கினார்.

காலப்போக்கில் வீணைச்சின்னத்தையும், மாநிலத்தில் கூட்டாட்சி என்ற கோஷத்தையும் முற்றாகவே புறமொதுக்கிவிட்டு மத்தியில் ஒரே ஆட்சியின் பங்காளியாகி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியுடன் சங்கமமாகிவிட்டார். வெற்றிலைச்சின்னத்தைத் தனது வெற்றியின் சின்னமாக ஏற்று வீணையை முற்றாகவே புறமொதுக்கினார். இப்போது மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியிலிருந்து தூக்கி வீசப்பட்ட நிலையில் அடுத்ததாக வெற்றிலையா, யானையா ஆட்சி பீடமேறும் என்று முடிவு செய்ய முடியாத நிலையில் டக்ளஸ் தேவானந்தா வீணையைத் தூசிதட்டி எடுத்துக்கொண்டு தேர்தல் களத்தில் இறங்கியுள்ளார்.

வெற்றிபெறும் தரப்புடன் மண்டியிட்டு அமைச்சர் பதவி பெற வீணை தடையாக இருக்காதல்லவா?

கடந்த காலங்களில் மஹிந்த அரசின் நம்பிக்கையான முகவராக தமிழ் மக்களுக்கு விரோதமான சகல விதமான சமூகவிரோத நடவடிக்கைகளையும் மேற்கொண்ட அவரும் அவரின் கட்சியினரும் இன்று தேர்தல் மேடைகளில் தமிழ் மக்களுக்காக கண்ணீர் வடிக்க ஆரம்பித்துவிட்டனர். தமிழ்த்தேசியக்கூட்டமைப்பைத் திட்டத் தொடங்கியுள்ளனர்.

1977இல் அடுத்த மேதினம் தமிழீழத்தில் என முழங்கிய தமிழ்த்தலைமைகள் இன்றுவரை எதுவுமே பெறவில்லை எனக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அப்படிச் சவால்விட்ட தமிழர் விடுதலைக்கூட்டணி தான் கொண்ட கொள்கைகளுக்கு, டக்ளஸ் தேவனந்தாவைப் போன்று துரோகமிழைத்த காரணத்தால் தமிழ் மக்கள் அவர்களை முற்றாகவே புறமொதுக்கினர் என்பதும் அவர்கள் தண்டிக்கப்பட்டனர் என்பதும் வரலாறு.

ஆனால் அவர்கள் கொள்கைகளுக்கு மட்டுமே துரோகம் செய்தனர். ஆனால் டக்ளஸ் கும்பல் இலங்கைப் படையினருடன் இணைந்து விடுதலைப் போராளிகளையும் மக்களையும் வேட்டையாடினர். தமிழர் தாயகத்தில் மூன்றில் இரண்டு பகுதியில் விடுதலைப் புலிகள் தங்கள் முழுமையான கட்டுப்பாட்டை நிலை நிறுத்தியிருந்தமையை மறுக்க முடியுமா? அந்த வெற்றிகளை முறியடிக்க துணை இராணுவக் குழுக்களாகச் செயற்பட்ட மஹிந்தவின் ஆதரவாளர்கள், தமிழர் விடுதலைக்கூட்டணியைச் குற்றஞ்சொல்ல என்ன யோக்கியதை இருக்கிறது. தங்கள் ஒவ்வொரு நகர்வையும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்துக்கு விரோதமாக மேற்கொண்ட டக்ளஸ் எந்த முகத்துடன் தமிழ் மக்கள் முன் வாக்குக் கோரி வருகிறார் என்பதுதான் கேள்வி.

அமைச்சுப் பதவியை இலக்குவைத்து தேர்தலில் போட்டியிடும் அவர் நாடாளுமன்ற உறுப்பினராக வெற்றிபெற வேண்டும். ஆனால் தமிழ் மக்கள் அவரின் துரோகங்களுக்குத் தகுந்த பாடம் கற்பிக்கத் தயாராகி விட்டனர். இனி இவர்களுக்குக் கிடைக்கப்போவதெல்லாம் அமைச்சுப் பதவிகளல்ல. மாறாக அரசியல் அநாதைப் பதவிதான் இவர்களுக்கு மக்கள் வழங்கப்போகும் பதவிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிந்து கொண்டிருக்கின்றது எண்ணெய்ப் பூமி 12

எஸ்.ஜே.பிரசாத்

சுன்னி - ஷியா பிரிவினருக்கு இடையிலான வெறுப்பு உணர்வு ஈராக் மக்கள் மனங்களில் ஆழ விதைக்கப்பட்டுவிட்டது.

மத்திய கிழக்கின் எண்ணெய் வளத்தைக் குறிவைத்திருந்த



மேற்குலகம், ஆரம்பத்தில் சதாமின் செயலுக்கு தூபம் போட்டு வளர்த்துவிட்டது. பிறகு அவரது அதே செயற்பாடுகளைக் குற்றம் எனக்



காரணம் காட்டி சதாமை தூக்கிலும் போட்டது.

ஈராக்கில் இரசாயன ஆயுதங்கள் இருப்பதாகக் கூறி 2003ஆம் ஆண்டு அமெரிக்கா, ஈராக் மீது ஓர் ஆக்கிரமிப்புப் போரைத் தொடுத்தது. மிகவும் வெளிப்படையான அந்த ஆக்கிரமிப்புக்கு உலகம் தழுவிய எதிர்ப்புகள் எழுந்தன. அதன்பிறகு யுத்தம் ஓய்ந்தது.

ஈராக்கில் இருந்து அமெரிக்கா வெளியேறிவிட்டாலும் அங்கு குண்டுச் சத்தம் ஓயவில்லை. அரசாங்கத்தை எதிர்த்து மக்கள் கிளர்ச்சிகள் வெடித்தபடியே இருந்தன. அதில் மதவாத இயக்கங்களின் பங்கு மிக அதிகம்.

அந்த நாட்டின் பண்பாட்டு வாழ்க்கையில் மதம் பிரிக்க முடியாத அம்சம் என்பதால், அதை ஒட்டியே அனைத்தும் நடைபெற்றன.

சதாமின் ஆட்சிக் காலத்தில் ஷியா பிரிவு முஸ்லிம்கள் ஒடுக்கப்பட்டனர்.

இந்தப் பின்னணியில், தற்போது ஈராக்கின் பல பெரிய நகரங்களைக் கைப்பற்றி கொடியை பறக்கவிட்டிருக் கின்றனர் ஐ.எஸ். அமைப்பினர்.

இது ஒரு கடும்போக்கு சுன்னி முஸ்லிம் இயக்கம். திடீரென ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு கிளம்பிய இந்த இயக்கம், அல்-கொய்தாவில் இருந்து பிரிந்து வந்தவர்கள் என்றும், தாங்கள் ஒரு நாடு கடந்த சர்வதேச இயக்கம் எனவும் அறிவித்துக்கொண்டது.

ஷியா பிரிவு முஸ்லிம்களை ஈவு இரக்கமின்றிக் கொன்று ஒழிப்பதன் வழியே இந்த இயக்கம் பிரபலம் அடைந்தது. இதன் மூலம் சுன்னி முஸ்லிம்கள் மத்தியில் தன் ஆதரவுத் தளத்தை விரிவுபடுத்தியது.

ஈராக், சிரியா நாடுகளின் சில பகுதிகளை ஒருங்கிணைத்து கடும்போக்கு இஸ்லாமியப் பிரதேசம் ஒன்றை உருவாக்குவது இந்த அமைப்பின் இலட்சியம்.

அது முடியுமா? முடியாதா என்பது வேறு பிரச்சினை.

சிரிய நாட்டில் நடைபெற்ற உள்நாட்டுப் போரின்போது அங்கு நிலைகொண்டிருந்த இந்த இயக்கம், கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு ஈராக்கில் ஊடுருவத் தொடங்கியது.

இந்த அமைப்பில் ஜிஹாதிகளாகச் சேர விரும்புவோருக்கு, தேச எல்லைகள் ஒரு நிபந்தனை அல்ல. இதனால் உலகின் பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் இந்த இயக்கத்தில் இணைந்துள்ளனர்.

ரமாடி, ஃபலூஜா எனப் படிப்படியாக ஒவ்வொரு பகுதியாக தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தது இந்த இயக்கம்.

இதனால் ஈராக் அதிபர் நூரி அல் மாலிகி, அமெரிக்காவின் உதவியை நாடியுள்ளார்.

ஐ.எஸ். அமைப்பை எதிர்கொண்டு சமாளிக்கும் பலமற்றதாக இருக்கிறது ஈராக் இராணுவம். அதாவது



அமெரிக்காவால் பயிற்றுவிக்கப்பட்ட ஈராக் இராணுவத்தால், முந்தா நாள் முளைத்த தீவிரவாதிகளைக்கூட எதிர்த்து நிற்க முடியவில்லை.

பல பகுதிகளில் ஆயுதங்களைக் கைவிட்டுவிட்டுப் பின்வாங்குகின்றனர். அல்லது சரண் அடைந்துவிடுகின்றனர்.

அப்படி எதிர்த் தாக்குதல் நடத்தாத பல இராணுவத் தளபதிகளை, பதவிநீக்கம் செய்ய உத்தரவிட்டிருக்கிறார் அதிபர் மாலிகி.

இதற்கிடையில் ஷியா பிரிவு முஸ்லிம் அமைப்புகள் தன்னிச்சையாக ஆயுதக் குழுக்களை உருவாக்கி, ஐ.எஸ். அமைப்புக்கு எதிராகச் சண்டையிடத் தொடங்கியுள்ளனர்.

சாத்தியம் உள்ள இடங்களில் இவர்களும், அரசப் படைகளும் இணைந்துகொள்கின்றனர். சில இடங்களில் ஐ.எஸ். அமைப்பினர் கைப்பற்றிய பகுதிகளைத் திரும்பவும் இவர்கள் மீட்டுள்ளனர்.

எனினும், ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது இந்த உள்நாட்டு யுத்தத்தில் தீவிரவாத அமைப்பினரின் கைகளே ஓங்கியுள்ளன.

இதுவரை சுமார் 5.5 இலட்சம் மக்கள் நாட்டைவிட்டு அகதிகளாக வெளியேறி உள்ளனர். யுத்தம் நீடிக்கும்பட்சத்தில் இந்த எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும். மனிதர்களை விரட்டி அடித்துவிட்டு, மிஞ்சியவர்களைக் கொன்றுவிட்டு, இயற்கை வளங்களைச் சிதைத்துவிட்டு எதை அடைய இந்த யுத்தம்? சுடுகாட்டை ஆட்சி செய்யவா!?

ஈராக்கில் சண்டை தாக்குப்பிடிக்க முடியவில்லை. ஈராக் இராணுவத்தை எதிர்த்து மூர்க்கத்தனமாக தாக்குதல் நடத்தி முன்னேறிக்கொண்டிருக்கிறது ஐ.எஸ்.ஐ.எஸ்.

அந்த மூர்க்கத் தாக்குதலால் ஈராக்கின் ரமடி நகரம் ஐ.எஸ். வசம் விழுந்தது. ஈராக் தனது ஆதிக்கத்தை இழந்தது.

ஈராக் மற்றும் சிரியா நாடுகளின் சில பகுதிகளை ஆக்கிரமித்துள்ள ஐ.எஸ். அமைப்பினர் கடந்த ஒரு ஆண்டுக்கும் மேலாக ஈராக்கிற்குள் புகுந்து கடும் சண்டையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அங்கே அவர்களின் கை ஓங்கியது.

உடனே விழித்துக்கொண்ட அமெரிக்கா தனது விமானப் படையை அனுப்பி ஈராக் இராணுவத்துக்கு உதவியது. இன்னும் உதவி வருகிறது.

ஆனாலும் ஐ.எஸ். அமைப்பை ஒடுக்க முடியவில்லை.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலத்தில் புதைந்த தமிழ்நகரம்

கல் தோன்றி மண் தோன்றாக்காலத்து முன் தோன்றியது தமிழ்ப்பண்பாடு. ஏனைய மொழிகளின் வயது சில நூற்றாண்டுகள் மாத்திரமே இருக்கையில் , ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முன்னரே வரி வடிவம் கொண்ட மொழியாக விளங்குவது தமிழ்தான். ஆயினும் உரிய ஆவணப்படுத்தல்கள் இன்மையால் ஈழத்திலும், இந்தியாவிலும் தமிழர்களின் தொன்மையான இருப்பை ஆதாரபூர்வமாக நிறுவ முடியாத நிலை காணப்படுகின்றது. இந்த நிலையில் தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்பையும், தொன்மையையும் வெளிப்படுத்தும் வகையில் மதுரை அருகே உள்ள கீழடியில் 2200 ஆண்டுகளுக்கு முந்தைய ஒரு பழங்கால நகரம் ஒன்றின் பகுதிகளை அகழ்வாராய்ச்சி யாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். இந்த நகரம் தமிழகத்தின் சிவகங்கை மாவட்டத்துக்கு உட்பட்டதாகும்.

அகழ்வாராய்ச்சியாளர் வீரராகவன் தலைமையிலான குழுவினர் அகழ்வாய்வில் ஈடுபட்ட குறித்த தொன்மையான தமிழ் நகரம் நிலத்தின் கீழ் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தென்தமிழகத்தின் முக்கிய நீராதாரமாக விளங்கும் வைகை நதி, மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடரில் வெள்ளிமலை அருகிலிருந்து உற்பத்தியாகி தேனி, மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களின் வழியே பாய்கிறது. தொல்லியல் வளமிக்க பகுதியாக விளங்கினாலும் கூட இதுவரை வைகை நதி பள்ளத்தாக்கு பகுதியில் அகழ்வாராச்சிகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.


2013-14 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வில் சுமார் 293 பல்வகையான தொல்லியல் எச்சங்கள் கொண்ட ஊர்கள், வைகை நதி பள்ளத்தாக்குப் பகுதியில் அடையாளம் காணப்பட்டன. அவற்றுள் மதுரை அருகே, சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ள கீழடி தொல்லியல் அகழாய்விற்கு தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த ஊர் மதுரையிலிருந்து 12 கி.மீ தொலைவில், தென்கிழக்குத் திசையில் ராமேஸ்வரம் செல்லும் பண்டைய வணிகப் பாதையில், வைகை நதியின் தென்கரையில் அமைந்துள்ளது.

தற்போதைய கீழடி ஊரிலிருந்து கிழக்கே ஒரு கி.மீ.தொலைவில், மணலூர் கண்மாயின் மேற்கரையில் பள்ளிசந்தை திடல் என்றழைக்கப்படும் தொல்லியல் மேடொன்று உள்ளது. தரையிலிருந்து சுமார் இரண்டரை மீற்றர் உயர்ந்து காணப்படும் இம்மேடு, தற்பொழுது தென்னந்தோப்பாக பயன்பாட்டில் உள்ளது. முன்பு நிலத்தினை உழும்பொழுது பலவகையான மட்கலன்கள், தொல்பொருட்கள், பெரிய அளவிலான சுட்ட செங்கற்கள் மற்றும் கூரை ஓடுகள் இங்கு கிடைக்க பெற்றுள்ளன. இம்மேட்டின் கிழக்கே சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவில் கொந்தகை என்ற ஊருக்கு செல்லும் பாதையில், இதனோடு தொடர்புடைய ஈமக்காடும் அமைந்துள்ளது. இங்கு பல ஈமத்தாழிகள் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன.



கீழடி மற்றும் கொந்தகை உள்ளடக்கிய பகுதிகள் பிற்காலப் பாண்டியர் காலத்தில் 'குந்திதேவி சதுர்வேதிமங்கலம்' என்ற பெயரில் அழைக்கப்பட்டுள்ளது. கீழடியுள்ள அர்ஜுனேஸ்வரர் கோயிலில் காணப்படும் 12 மற்றும் 13ஆம் நூற்றாண்டு கல்வெட்டுகளில், 'வேலூர் குளக்கீழ்' என்ற நாட்டு பிரிவின் கீழ் அமைந்திருந்ததாக குறிக்கப்படுகிறது. இதேபோன்று பல்வகை தொல்லியல் ஆதாரங்கள் இருந்தும்கூட வைகை நதி பள்ளத்தாக்கு பகுதியில் விரிவான தொல்லியல் அகழாய்வு ஏதும் இன்று வரை மேற்கொள்ளப்படவில்லை. அனுப்பானடி, பரவை, கோவலன் பொட்டல், தி.கல்லுபட்டி, சங்க கால பாண்டியர்களின் துறைமுகமாக இருந்த அழகன்குளம் போன்ற இடங்களில் சிறிய அளவில் மாத்திரமே அகழாய்வு நடைபெற்றுள்ளது.

**2000 ஆண்டுகளுக்கு முன்னரே வரி வடிவம் கொண்ட மொழியாக விளங்குவது தமிழ்தான். ஆயினும் உரிய ஆவணப்படுத்தல்கள் இன்மையால் ஈழத்திலும், இந்தியாவிலும் தமிழர்களின் தொன்மை யான இருப்பை ஆதாரபூர்வமாக நிறுவ முடியாத நிலை காணப்படுகின்றது.**



இவற்றினை அடிப்படையாக வைத்து, நீண்ட இடைவெளிக்குப் பிறகு இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையால் வைகை நதி பள்ளத்தாக்கு பகுதியில், இரும்புக் காலம் முதல் பல்வேறு காலக்கட்டங்களில் ஏற்பட்ட பண்பாட்டு வளர்ச்சி மற்றும் உருமாற்றத்தினை அறிந்து கொள்ளும் வகையில், சிவகங்கை மாவட்டம், கீழடி கிராமத்தில் நடப்பாண்டில் தொல்லியல் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மார்ச் மாதம் முதல் நடைபெற்று வரும் அகழாய்வில், கி.மு 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 3ஆம் நூற்றாண்டை சார்ந்த தொல்லியல் எச்சங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றுள் பெரிய அளவிலான சுட்ட செங்கற்களைக் கொண்டு கட்டபட்ட கட்டட பகுதிகள், பெரிய கூரை ஓடுகள், முத்து மணிகள், கண்ணாடி மற்றும் பல்வகையான கல்மணிகள், சங்கு வளையல்கள், சுடுமண் பொம்மைகள், அம்மி, குழவி, இரும்பு, செப்பு பொருட்கள் போன்றவை அடங்கும்.

ரோமானிய நாட்டுடன் இவ்விடம் வணிகத் தொடர்பு கொண்டிருந்ததற்கு சான்றளிக்கும் வகையில், வணிகர்களால் கொண்டு வரப்பட்ட ரூலட் மற்றும் அரிட்டைன் வகை மண்பாண்ட துண்டுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. மேலும் வரலாற்று தொடக்க காலத்தை சேர்ந்த கருப்பு சிவப்பு மண்பாண்ட வகை, வெள்ளை வண்ணம் பூசப்பட்ட கருப்பு சிவப்பு மண்பாண்ட வகை மற்றும் ரசட் கலவை பூசப்பட்ட மண்பாண்ட வகையும் அகழாய்வில் கிடைத்துள்ளன.

இது தவிர்த்து தனி நபர்களின் பெயருடன் தமிழ் பிராமி எழுத்துப் பொறிப்பு கொண்ட மண்பாண்ட ஓடுகள் இங்கு கிடைத்திருப்பது குறிப்பிடதக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை



sudarolijaffna@gmail.com

361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 567 7609


## வயிற்றோட்டப் பாதிப்புச் செய்தி வயிற்றில் புளியைக் கரைக்கிறது

சுற்றாடல் மாசடைதல் உலகம் தழுவிய நிலையில் ஒரு பெரும் பிரச்சினையாக உருவாகி வருகிறது.

சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பாக காலத்துக்குக் காலம் உலகத் தலைவர்கள் கலந்து கொள்ளும் சர்வதேச மாநாடுகளும், நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தியாவும் சுவாச் பாரத் அபியான -'சுத்தமான இந்தியா' என்கின்ற கோஷத்துடன் - தூய்மைக்கு முக்கியத்துவம் வழங்கிச் செயற்பட்டு வருகின்றது. இப்பாரிய பணியில் இந்தியப் பிரதமர் நேரடியாக இறங்கி மக்களை விழிப்படையச் செய்து வருகின்றார்.

இலங்கையிலும் சுற்றுச் சூழலுக்கு மிகவும் அச்சுறுத்தலாக உள்ள 'திண்மக் கழிவு' பிரச்சினைக்கு ஒரு முறையான செயற்றிட்டம் அவசியம் என ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக ஒவ்வொரு அரச நிறுவனமும், தனியார் துறையும் தத்தமது பொறுப்புணர்ந்து வேண்டும் என ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில் எமது பிரதேசத்தின் பெருமளவு திண்மக் கழிவுகளை 'ஏந்து பிரதேசமாக'க் கொண்ட கல்லுண்டாய் அருகே வசிக்கும் மக்கள் மத்தியில் வயிற்றோட்டப் பாதிப்பு என்கின்ற செய்தி - 'வயிற்றில் புளியைக் கரைக்கும்' செய்தியாக வெளிவந்துள்ளது.

கடந்த ஒரு மாத காலத்துக்குள் ஆனைக்கோட்டை, நவாலி ஆகிய கிராமங்களில் வசிக்கும் ஏராளமான சிறுவர்கள் உட்பட, 50க்கும் மேற்பட்டோர் வயிற்றோட்ட நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருவதாக, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் இ.தேவநேசன் தெரிவித்துள்ளார்.

கல்லுண்டாய், காக்கைதீவு உள்ளிட்ட பகுதிகளில் வகைதொகையின்றித் தொடர்ந்தும் கொட்டப்படும் திண்மக் கழிவுகள், மலக்கழிவுகளினால் இந்தத் தாக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சந்தேகிக்கின்றார்.

யாழ்.போதனா வைத்தியசாலைக் கழிவுகள் உட்பட, யாழ்.மாநகரசபை மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலிருந்து சேகரிக்கப்படும் கழிவுகள் இங்கு தஞ்சமடைகின்றன.

இதற்கெதிராக அந்தப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தனர். யாழ். நகரப்பகுதி, போதனாவைத்தியசாலை என்பவற்றுக்கு குடாநாட்டின் பலபகுதிகளிலிருந்தும் வருகை தருபவர்களால் திண்மக் கழிவுகளும் அதிகரிக்கின்றன.

எனவே இதற்கு அனைவரும் இணைந்து ஒரு தீர்வு காணவேண்டும். இல்லையேல் எதிர்வரும் மழைக்காலம் இத்தகைய நோய்கள் குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் வலுக்குன்றியோரையும் தாக்கும் ஏதுநிலை தோற்றுவிக்கப்பட்டு விடும்.

யாழ்.போதனாவைத்தியசாலை இதுவரை காலமும் சுற்றாடல் உரிமை பெறாமலே இயங்குகின்றது.

அங்கிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பாக இருக்கின்றது என்று மத்திய சுற்றாடல் அதிகாரசபை அதிகாரிகள் அண்மையில் தெரிவித்திருந்தனர்.

போதனாவைத்தியசாலை க்கம் தமது சுட்டுவிரலை நீட்டும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை, இந்தப் பகுதியில் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகளை முகாமைத்துவம் செய்யும் வழிவகைகளைக் கண்டறிந்து முகாமைத்துவத்துக்கான ஆலோசனைகளையும் வழங்கி உதவவேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் இதற்கான அழுத்தங்களைப் பிரயோகிக்கவேண்டும்.

# மணி முள் முடியும்

இந்த முறை நாடாளுமன்றத் தேர்தலில் பிரதான பேசு பொருளாக மாறியிருக்கிறார் முன்னாள் ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ. ஜனவரி 08ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பெற்ற தோல்வியோடு மஹிந்த என்ற பூனை மீண்டும் அரசியல் அடுப் பங்கரையை நாடாது என்றே நாட்டு மக்கள் கருதினர். அந்தளவுக்கு நாட்டின் பொருளாதாரத்தை வழித்துத் துடைத்து , மக்களை மீள முடியாத ஏழ்மைக்குள் தள்ளி விட்டு , தன்னுடைய குடும்பத்தாரை மட்டும் உலகப் பணக்காரர் தர வரிசைப்பட்டியலுக்குள் கொண்டு செல்ல மஹிந்த அரும்பாடு



பட்டிருந்தார். எங்கெல்லாம் கடன் வாங்க முடியுமோ அங்கெல்லாம் அவற்றை வாங்கிக் குவித்து, அந்தத் தொகையை தன் குடும்பக் கணக்கில் சேர்த்துக் கொண்டார். கடனாளிகள் மக்களாக இருக்க, சுகபோகத்தை அனுபவிப்பவர்களாக ராஜபக்ஷ குடும்பத்தினர் இருந்தார்கள்.

வெறுமனே பொருளாதார ரீதியாக மட்டுமன்றி அதிகார ரீதியாகவும் ராஜபக்ஷ குடும்பத்தின் கரங்களே இந்தக் குட்டித் தீவு எங்கும் பரந்து விரிந்திருந்தன. வெளிப்பார்வைக்கு அதிவேக நெடுஞ்சாலைகள், வானளாவிய கட்டடங்கள், புதிய விமான நிலையங்கள், துறைமுகங்கள் நிர்மாணிக்கப்பட்டதாக காட்டிக் கொண்டாலும் அத்தகைய அபிவிருத்திகள் கூட நாட்டை விடவும் மஹிந்த குடும்பத்தின் நலனையே முதன்மையாகக் கொண்டிருந்தன. ஒவ்வொரு அபிவிருத்தித் திட்டத்திலும் செலவழிக்கப்பட்ட தொகையிலும் பார்க்க பன்மடங்கு பணம் மஹிந்த குடும்பத்தால் இடை நடுவில் பகிரங்கமாகவே கபளீகரம் செய்யப்பட்டிருந்தது. இதைவிட விமான நிலையம், புதிய கட்டடங்கள், சர்வதேச கிரிக்கெட் மைதானம் என்பன வெல்லாம் கேந்திர முக்கியத்துவமற்ற அம்பாந்தோட்டையில் நிறுவப்பட்டிருந்தன. கிட்டத்தட்ட கொழும்புக்கு நிகரான நகராக அம்பாந்தோட்டையை மாற்றுவதற்கே மஹிந்தவின் ஆட்சிக்கால அபிவிருத்திகள் முனைந்தன. ஏனெனில் அம்பாந்தோட்டை மஹிந்தவின் சொந்த மாவட்டம். தன்னுடைய வாக்கு வங்கியை என்றைக்கும் சரிந்து போக விடாமல் செய்வதற்கே இவ்வாறு அம்பாந்தோட்டைக்கு அபிவிருத்தியில் முதலிடம் கொடுத்திருந்தார் மஹிந்த. ஆனால் உண்மையாகவே அபிவிருத்திக்காக ஏங்கி நின்ற ஏனைய பிரதேசங்களுக்கு அம்பாந்தோட்டையில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் மிச்ச சொச்சங்களே கிள்ளித் தெளிக்கப்பட்டிருந்தன.

இப்படியெல்லாம் ஊழல் பெருச்சாளியாக நாட்டையே சூறையாடிய ஒரு அதிகாரத் தலைவர் மக்களால் நிராகரிக்கப்பட்ட பின்னர் நாகரீகமாக மெதனமுல்ல இல்லத்தில் அமர்ந்திருக்க வேண்டியதே உண்மையான அரசியல் பண்பாக இருந்திருக்கும். ஆனால் அதிகார சுவையை தெவிட்டத் தெவிட்ட ருசி பார்த்த மஹிந்தவுக்கு அதை அவ்வளவு லேசில் விட்டுக் கொடுக்க மனமில்லை. தன்னுடைய விசுவாசிகளை வைத்து ஆடக் கூடாத ஆட்டமெல்லாம் ஆடி, இப்போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் குருநாகல் மாவட்ட முதன்மை வேட்பாளராக நாடாளுமன்றத் தேர்தலில் களமிறங்கியிருக்கிறார். எனினும் அவர் தேர்தலில் தோற்கடிக்கப்படுவார் என்றும், சில சமயங்களில் மஹிந்த வென்றாலும் கூட அவருக்கு பிரதமர் பதவி வழங்கப்படாது என்றும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சொல்லியிருக்கிறார். ஆனால் ஓகஸ்ட் 18 ஆம் திகதி மஹிந்தவே நாட்டின் பிரதமர் என்ற முழக்கத்தோடு மஹிந்த தரப்பினர் தேர்தல் பரப்புரைகளை மேற்கொண்டு வருகிறார்கள். மீண்டும் மஹிந்த கையில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பிரமன்

அதிகாரங்கள் செல்லப் போகின்றன என்பது போன்ற கருத்தாடல்களை கட்டியுள்ளன. மஹிந்தவுக்கு பிரதமர் பதவியை வழங்கா விட்டால் நாடாளாவிய ரீதியில் பெரும் மக்கள் சுனாமி ஒன்று உருவாகும் என்று மஹிந்த விசுவாசிகள் இப்போதே மிரட்டத் தொடங்கி விட்டார்கள்.

ஆனால் இவையெல்லாமே கைக்கு வரமுன்னர் நெய்க்கு விலை பேசும் செயல்கள் தான். இப்போதைய நிலவரங்களின் படி மஹிந்த ராஜபக்ஷ குருநாகல் மாவட்டத்தில் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாவதற்கு அதிக வாய்ப்புகள் இருக்கத் தான் செய்கின்றன. சில சமயங்களில் அதி கூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற ஒருவராகவும் மஹிந்த வரக்கூடும். ஆனால் அவர் நாடாளுமன்ற உறுப்பினராவதோ அல்லது அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெறுவதோ பிரதமர் நாற்காலியை எட்டிப் பிடிக்க உதவாது. உதாரணமாக கிரிக்கெட் போட்டி ஒன்றில் ஒரு அணியின் வீரர் அதிரடியாக ஆடி சதமடித்தால் மட்டும் அந்த அணி வெற்றி பெறுவதில்லை. மாறாக ஒட்டு மொத்த வீரர்களின் ஒருங்கிணைந்த வெற்றியே அணிக்கு வெற்றியைத் தேடித் தரும். மஹிந்தவின் நிலையும் கிட்டத்தட்ட தோற்ற அணியில் சதமடித்த வீரரின் நிலை தான். ஏற்கனவே மஹிந்த - மைத்திரி முறுகலால் சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களிடையே பெரும் குழப்பம் தோன்றியுள்ளது. அத்துடன் சுதந்திரக் கட்சியின் முக்கிய புள்ளிகள் நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்து யானைச் சின்னத்தில் போட்டியிடுகிறார்கள். போதாக்குறைக்கு சுதந்திரக்கட்சியின் முன்னாள் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகாவும் நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் வெற்றிக்காக களத்தில் இறங்கி விட்டார். இது தவிர ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சிக்கான நிரந்தர வாக்கு வங்கியும் எந்தவித சேதாரமுமில்லாமல் அப்படியே இருக்கிறது. எனவே கூட்டிக் கழித்துப் பார்த்தால் நாடாளுமன்றத் தேர்தலில் நல்லாட்சிக்கான ஐக்கிய முன்னணியே அதிக ஆசனங்களைப் பெறுவதற்கு வாய்ப்புள்ளதாக கணிப்புகள் கூறுகின்றன. இப்படியாக கள யதார்த்தம் இருக்கும் போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினர் மஹிந்தவைப் பிரதமர் ஆக்காமல் ஓயோம் என்பது வெறும் பரப்புரைக்கான கோஷமே தான். ஏனெனில் அவர்களுக்கும் இப்போது நாட்டு மக்களின் மனோநிலை எப்படி என்று நன்கு தெரிந்தே இருக்கும். இதை விட ஜனாதிபதி மைத்திரியும் சத்தமில்லாமல் சில



> **வெறுமனே பொருளாதார ரீதியாக மட்டுமன்றி அதிகார ரீதியாகவும் ராஜபக்ஷ குடும்பத்தின் கரங்களே இந்தக் குட்டித் தீவு எங்கும் பரந்து விரிந்திருந்தன. வெளிப்பார்வைக்கு அதிவேக நெடுஞ்சாலைகள், வானளாவிய கட்டடங்கள், புதிய விமான நிலையங்கள், துறைமுகங்கள் நிர்மாணிக்கப்பட்டதாக காட்டிக் கொண்டாலும் அத்தகைய அபிவிருத்திகள் கூட நாட்டை விடவும் மஹிந்த குடும்பத்தின் நலனையே முதன்மையா கக் கொண்டிருந்தன. ஒவ்வொரு அபிவிருத்தித் திட்டத்திலும் செலவளிக்கப்பட்ட தொகையிலும் பார்க்க பன்மடங்கு பணம் மஹிந்த குடும்பத்தால் இடை நடுவில் பகிரங்கமாகவே கபளீகரம் செய்யப் பட்டிருந்தது**

காரியங்களை தேர்தல் காலத்தில் செய்யத் தொடங்கி விட்டார். குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர்களாக இருந்த மஹிந்தவின் விசுவாசிகளை தூக்கி எறிந்து விட்டு தனக்குச் சார்பானவர்களை அமைப்பாளர்களாக நியமித்து வருகிறார். இந்த நியமனங்கள் முழு வீச்சோடு தேர்தல் நடவடிக்கைகளை முன் கொண்டு செல்ல மஹிந்த தரப்புக்கு பெரும் முட்டுக்கட்டையாகவே இருக்கும். அத்தோடு இந்தத் தேர்தலில் சுதந்திரக் கட்சி தோற்று பிரதமர் பதவி கிடைக்காவிட்டாலும் கூட மஹிந்த இன்னொரு திட்டம் தீட்டியிருக்கிறார். இந்தத் தோல்விக்கு முழுக்காரணம் ஜனாதிபதி மைத்திரியே என்று குற்றம் சாட்டி அவரை சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து அகற்றி விட்டு அந்தத் தலைமையை மீண்டும் தன் வசம் கொண்டு வருவதே மஹிந்தவின் மற்றைய திட்டம். இதனைத் தேர்தலுக்கு முன்னரே செய்ய அவர் திட்டமிட்டிருந்தாலும், கட்சித் தலைவரின் அனுமதியின்றி மத்திய செயற்குழுவைக் கூட்ட முடியாது என நீதிமன்றம் தடைவிதித்து விட்டதால் அது பிசுபிசுத்துப் போய் விட்டது. ஆகவே சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை தேர்தலுக்குப் பின்னர் கைப்பற்றுவோம் என்று ஆறப்போட்டிருக்கிறார் மஹிந்த. ஆனால் அந்த அவகாசத்தை மைத்திரி மிகச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு மஹிந்த விசுவாசிகளை அமைப்பாளர் பதவிகளில் இருந்து களை எடுத்து பதிலீடாக தனக்குச் சார்பானவர்களை நியமித்து விட்டார். ஆகவே தேர்தல் முடிந்து அதில் சுதந்திரக் கட்சி தோற்றாலும் கூட மீண்டும் தலைமைப் பதவியை அடைவது மஹிந்தவுக்கு அவ்வளவு சுலபமானதாக இருக்கப் போவதில்லை. உண்மையில் சொல்லப் போனால் ஓகஸ்ட் 17க்குப் பின்னர் அவருக்கு எஞ்சப் போவது நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பதவி மட்டுமே. மிஞ்சிப் போனால் எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிடைக்கலாம். அது கூட உறுதியில்லை. ஏனென்றால் தற்போது நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியில் போட்டியிடும் ராஜித, அர்ஜுனா ரணதுங்க போன்றோர் தேர்தலுக்குப் பின்னர் மீளவும் சுதந்திரக் கட்சிக்கு திரும்பி விடுவார்கள். இதனால் சுதந்திரக் கட்சி தேர்தலில் தோற்றால் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கும் கடும் போட்டி அந்தக் கட்சிக்குள் நிலவும்.

முன்னைய காலங்களைப் போல ஒரு 'பிளேன் கோப்பியை' கொடுத்து எதிர்த்தரப்பு உறுப்பினர்களை மஹிந்தவால் இனிமேல் தன்னுடைய 'பொக்கற்றுக்குள்' போட்டுக்கொள்ள முடியாது. இதை விட இன்னொரு ஆபத்தும் மஹிந்தவை நெருங்கிக் கொண்டிருக்கிறது. அதாவது 2005ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த புலிகளுக்குப் பணம் கொடுத்த விடயம் பற்றிய விசாரணைகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஒரு வேளை அந்த விடயம் உண்மையானால் மஹிந்தவின் குடியுரிமையும், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியும் பறிக்கப்பட்டு சிறைவாசியாக மாறும் நிலையும் ஏற்படலாம். சுருக்கமாகச் சொன்னால் 2010இல் ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு சரத்பொன்சேகாவுக்கு என்ன கதி நேர்ந்ததோ அதே கதி தான் மஹிந்தவுக்கும் காத்திருக்கிறது போலும். இதனால் தான் "மஹிந்தவுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு என்ன என்பது பற்றி ஓகஸ்ட் 18 ஆம் திகதி அவர் உணர்ந்து கொள்வார்" என்று ராஜித சேனாரத்ன பூடகமாக சொல்லியிருந்தார். மணிமுடி பற்றிய கனவுகளின் மிதப்பில் இருக்கும் மஹிந்தவுக்கு முள் முடிகளே காத்திருக்கின்றன.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆதங்கன்

# கேள்விக் குழந்தைகள்

**கேள்வி-1**

இப்போதைய குழந்தைகள் எல்லோருமே கேள்வித்தொழிற்சாலைகள். அவர்களிடமிருந்து கிளம்பும் பல கேள்விகளுக்கு பதிலே இருக்காது. ஔசுவும் இப்படிக் கேள்விக் குழந்தைதான்.

முருகன் கோயிலுக்குள் நுழைந்தவனின் கண்ணில் பட்டது, ஆண்கள் மேலங்கியின்றி ஆலயத்துக்குள் நுழையவும்' அறிவிப்பு.

ஏன் ஆம்பிளையள் மட்டும் மேல சேர்ட் போடாம போகோணும்? பொம்பிளையாக்கள் சாறி உடுத்திக் கொண்டு போகினமே

வழக்கம் போல கேள்விச் சங்கிலியைப் படரவிட்டான்.

கொஞ்சம் யோசித்த தாத்தா சாமியைக் காட்டினார்.

அங்க அப்புசாமியைப் பாரப்பு! முருகன் மேல சேர்ட் போடாமத்தானே நிக்கிறார். வள்ளி, தெய்வானை சாறி கட்டியிருக்கினம். சாமியே இப்பிடி நிக்கேக்க கும்பிட வாற ஆக்கள் சேர்ட் போடுறது சரியோ?

அவரின் எதிர்க் கேள்வியால் ஔசு அப்போதைக்கு கப்சிப்'.

அந்த மௌனம் இன்னொரு நாளில் வேறொரு கோயிலில் தாத்தா எதிர்பாராக் கோணத்தில் சுக்கலாகி, திணறல் கேள்வியாக அவரைத் தாக்கியது.



தாத்தா! சாமியே இப்பிடி இருக்கேக்க ஆம்பிளையாக்கள் வேட்டியோட வாறது சரியோ? ஒண்டுமில்லாமல் எல்லோ வர வேணும் என்று வைரவரைக்' காட்டிக் கேட்கத் தொடங்கினான் ஔசு.

நல்ல, காலம்நான்கோயிலுக்குபோறேலை.

**கேள்வி-2**

----------------

இந்த முறை ஔசுவின் கேள்விப்பொறியில் தெரியாத்தனமாகச் சிக்கினது நான் தான்.

லக்கி வெளிநாட்டால வந்திருந்தான். அவனுக்கு கலியாணம். அதால வழமையை விடவும் கொஞ்சம் வேலை கூட. வீட்டை போக லேட்'. நான் வீட்டுக்க வந்தவுடனேயே ரீச்சர், இந்த எக்ஸிபிசனுக்கு வைக்க நாய் ஒண்டு பிறிசில் போட்டில கீறிக்கொண்டு வரட்டாம்.கீறித்தாங்கோ எண்டு கையில ரெடியா வைச்சிருந்த பிறிசில் போட்டோட' வந்தான்.



நாளைக்கு கீறித்தாறன்

இல்ல. விடியக் கொண்டு போக வேணும்ம்ம்

இண்டைக்கு முழுக்க நாய் மாதிரி வேலை. அலுப்பாக் கிடக்கு. கொஞ்சம் ரெஸ்ட் எடுக்க விடப்பு

சொன்னவுடன் க்ளுக்'கெண்டு ஔசு சிரிக்கத் துடங்கிட்டான்.

எனக்கு விளங்கேலை. அலுப்போட அவன்ர சிரிப்பும் சேர கோபம் புசுக்கெண்டு மூக்கில.



இப்ப என்னத்துக்குச் சிரிக்கிறாய்?

நீங்கள் சொன்னதைக் கேட்டு சிரிப்பு வந்திட்டு

சிரிக்கிற மாதிரி என்ன சொன்னன்?

நாய் மாதிரி வேலை எண்டியள்..

ம்ம். அதுக்கென்ன..?

எங்கட வீட்டு நாயின்ர வேலை எப்ப பாத்தாலும் சாப்பிட்டுட்டு மூலையில படுத்திருக்கிறதுதானே. அது வேற ஒரு வேலையும் செய்யிறேலையே. அப்ப நீங்களும் லக்கி மாமா வீட்ட சாப்பிட்டு, படுத்திட்டு வந்தோ அலுப்பு எண்டுறீங்கள்?

எனக்கு தலை சுத்திச்சு. எட, நாய்வேலை எண்டா இப்பிடி ஒரு அர்த்தமோ?

இந்த நாய்க்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும்' என்னை நானே பேசிக்கொண்டு படத்தைக் கீறத்தொடங்கினன். இப்பவும் எங்கட வீட்டு நாய் மத்தியானச் சாப்பாடு செமிக்காமல் மூலையில அரைக்கண்ணை மூடிக்கொண்டு நல்ல நித்தா.....!

# யமனுக்கு கொண்டாட்டம்



**கோ**யிலில் கோஷ்டி' முடியமுன்னரே முறுக்கேறிக் கொண்டன அவர்களின் மோட்டார் சைக்கிள்கள். ஒளிப்பந்துகள் ஒன்றையொன்று விரட்டத் தொடங்கின. இவர்களின் வேகத்தில் பாதையில் படுத்திருந்த இருளின் தூக்கம் கலைந்து, புறுபுறுத்துக் கொண்டது. இன்னும் கொஞ்சத்தூரம் தான். மற்றவர்களை உசுப்பேற்றும் வகையில் வந்தவர்களில் ஒருவன் திடீர் வேகமெடுத்து வளைந்து, நெளிந்து, ஒரு வெட்டு வெட்டியபடி முன்னே பறந்தான். மற்றவர்கள் விடுவார்களா? அவர்களின் கைகளுக்கும் அக்சிலேட்டரை' முறுக்கத் தெரியாதா என்ன? பிரகடனப்படுத்தப்படாத நள்ளிரவு ரேஸ் தொடங்கிற்று. காப்பெற் ரோட்டில் வழுக்கியபடி எல்லோரதும் 'ஈ-கோக்களையும்' சுமந்தபடி மோட்டர் சைக்கிள்கள் 'சுப்பர் சொனிக்குகளாக' மாறி ஒன்றையொன்று முறைத்தபடி முன்னேறின.

வல்லைச் சந்தி. வளைவு கொஞ்சம் கூடத்தான்.

சுப்பர் சொனிக் வேகத்துக்கு வளைவு ஈடு கொடுக்க முடியவில்லை. இராணுவ பூந்தொட்டிகளையும் , முட்கம்பிகளையும் முத்தமிட்டு, கிழிந்து போய் பனையில் முட்டி, சரிந்தது ஒரு மோட்டார் சைக்கிள்.

அம்மா............!

அந்தக்குரலோடு ஒரு 18 வயது இளசின் உயிர் அடங்கிப்போனது. கூடப்போன இருவரும் எழும்ப முடியாக் காயங்களோடு.

எதுவுமே அறியாதவளாக இறந்து போனவனின் தாய், அவனுக்குப் போட்டுவைத்த புட்டும் இறால் குழம்பும் நிரம்பிய கோப்பையோடு இருளை ஊடறுத்தபடி காத்திருக்கிறாள்.

(யாழில் இப்படி சனசந்தடி உள்ள இடங்களில் கூட இளைஞர்களின் திடீர் ரேஸ் ஓட்டங்கள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளதால், யமனுக்கு நல்ல வருமானம்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உருத்திரா


# இலங்கையில் ஐ.எஸ். காலூன்றுகின்றதா?

'வண்ணத்துப்பூச்சி விளைவுத் தத்துவம்' பற்றி நீங்கள் கேள்விப்பட்டதுண்டா? சிலசமயங்களில் அதைப்பற்றிக் கேள்விப்படாவிட்டாலும் நடைமுறை வாழ்வில் அநேகதரம் அந்தத்தத்துவத்தை நீங்கள் அனுபவித்திருப்பீர்கள். அல்லது பிரயோகித்திருப்பீர்கள். கிட்டத்தட்ட மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடுவதுதான் இந்த வண்ணத்துப்பூச்சித் தத்துவத்தின் வேலை. எங்கள் வீடுகளில் மரபில் உள்ள 'முழுவிசளம்' பார்க்கும் பழக்கம் கூட இந்த வண்ணத்துப்பூச்சி விளைவுத் தத்துவத்தின் வழியில் பிறந்ததுதான். அதாவது வீதியில் செல்லும் போது குறுக்கே பூனை ஓடினால் போகும் காரியம் கெடும் என்று சொல்வார்கள். வீதியின் குறுக்கே ஓடும் பூனைக்கும் போகும் காரியத்துக்கும் என்ன தொடர்பு என்று பகுத்தறிவுவாதிகள் குழம்புவார்கள். அந்தக் குழப்பம் நியாயமானதும் கூட. ஆனால் வண்ணத்துப்பூச்சித் தத்துவம் இந்த பகுத்தறிவுவாதக் குழப்பத்தை இல்லாதாக்கிவிடும் வல்லமையுடையது.

அதாவது குறுக்கே ஓடும் பூனை சாக்கடையில் விழக்கூடும். அந்தச்சாக்கடைத் தண்ணீர் அருகே இருக்கும் ஒருவர் மீது படலாம். அப்படிப்பட்டால் அவர் அதைக் கழுவ தண்ணீர்க்குழாயை நாடுவார். ஆனால் தண்ணீர் வராது. கோபத்தில் அந்தக் குழாயை உடைப்பார். உடனே பொலிஸ் அவரைக் கைது செய்யும். ஆனால் அவர் ஒரு பிரமுகர் என்பதால் அவரை விடுவிக்கக்கோரி ஆர்ப்பாட்டத்திலும் கலவரத்திலும் ஆதரவாளர்கள் ஈடுபடுவார்கள். இதனால் நீங்கள் செல்லும் காரியம் குழம்பிவிடும். இப்படி ஒரு வட்டப்பிணைப்பை இந்த வண்ணத்துப்பூச்சித் தத்துவம் ஏற்படுத்தி விடுகிறது. பல சமயங்களில் இது அபத்தமாகத் தோன்றினாலும் சில சமயங்களில் வண்ணத்துப்பூச்சித் தத்துவம் நம் வாழ்வையே புரட்டிப்போட்டு விடுகிறது. உதாரணமாக அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத் தாக்குதலால் ஏற்பட்ட வண்ணத்துப்பூச்சி விளைவுகளில் ஒன்றாகவே தமிழர்களின் விடுதலைப்போராட்டம் சிதைந்து போனது. ஏனெனில் அதன் பின்னர் தான் உலக நாடுகளில் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் முடுக்கி விடப்பட்டு, ஆயுத அமைப்புகள் அழித்தொழிக்கப்பட்டன. அதன் அங்கமாகவே விடுதலைப்புலிகள் அமைப்பும் அழிக்கப்பட அமெரிக்கா உதவியது.

சரி, இந்த ஆலாபனைகள் இப்போது எதற்கு? காரணம் இருக்கிறது. மீண்டுமொருமுறை இப்படிப்பட்ட வண்ணத்துப்பூச்சியின் சுழலில் நாம் சிக்கிக்கொள்ளும் நிலை ஏற்பட்டிருக்கிறது. உலகை இப்போது ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் ஒரு ஆயுத அமைப்பு எதுவென்றால் ஐ.எஸ் என்று அனைவரும் அடையாளம் காட்டிவிடுவார்கள். அந்தளவுக்கு மிகக்கோரமான முகத்தை அந்த அமைப்பு பதிவு செய்து வைத்திருக்கிறது. மிகப்பெரிய நிலப்பரப்பையும் தன்வசமாக்கிக் கொண்டுள்ள இராட்சத அமைப்பு ஐ.எஸ். இப்படிப்பட்ட அமைப்பு அதிகம் பிரபலமடையக் காரணம் கழுத்து வெட்டுக் கொலைக் காணொலிகள் தான். அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள், சுற்றுலாப்பயணிகள் எனப் பலரை பணயக்கைதிகளாக்கி கொள்ளும் ஐ.எஸ் அமைப்பு, குறிப்பிட்ட நாடுகளுடன் பேரம் பேசும். அந்தப் பேரம் படியாவிட்டால் எந்தவித சமரசங்களையும் ஐ.எஸ் அமைப்புச் செய்து கொள்வதில்லை. உடனேயே அந்தப் பணயக்கைதிக்கு மரணதண்டனைதான்.

ஆயினும் இந்தத் தண்டனை பார்ப்போரைக் குலைநடுங்கச் செய்யும். வெட்ட வெளி ஒன்றில் 'ஒரேஞ்ச்' வர்ண முழுநீள ஆடையுடன் முழந்தாளிட்டு அந்தப் பணயக்கைதி இருந்தபடுவார். பின்னர் அவருக்கு ஏன் தண்டனை என்று கறுப்பு நீற முகமூடி ஆடையுடன் நிற்கும் ஐ.எஸ் அமைப்பைச் சேர்ந்த ஒருவனால் வாசிக்கப்படும். அதன் பின்னர் அந்தப்பணயக்கைதி ஏதாவது சொல்ல அனுமதியுண்டு. அப்படிச் சொல்லி முடித்த பின்னர் ஐ.எஸ் காரனின் கைகளில் பளிச்சிடும் கத்தி அந்தப் பணயக்கைதியின் கழுத்தை ஒருமுறை ஆழமாகத் தடவி மீளும். குருதி வழிந்தோட அந்தப் பணயக்கைதி சடலமாக வீழ்வார். இவ்வளவும் இன்னொரு ஐ.எஸ்காரனால் வீடியோவில் பதிவு செய்யப்பட்டு, பின் னர் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். பார்ப்போர் ஐயோ. இவ்வளவு அக்கிரமக்காரர்களா?' என்று பதறு வார்கள். அடுத்த முறை இன்னொரு பணயக்கைதி பிடிக் கப்படும் போது அந்த நாட்டு அரசுகள் இந்தக் கொலை வீடியோக்களில் தங்கள் நாட்டுப் பிரஜையும் ஒருவராக மாறிவிடக்கூடாது என்ற பயத்தில் ஐ.எஸ் அமைப்பின் பேரத்துக்கு உடனேயே படிந்து விடுவார்கள்.



இதுமட்டுமல்லாது தமக்கு எதிரான சகலரையும் கொன்று குவிப்பதும், வன்புணர்வதும், சித்திரவதை செய்வதும் ஐ.எஸ் அமைப்பின் சாதாரண செயற்பாடுகள். ஏனைய முஸ்லிம் ஆயுத அமைப்புகள் சக முஸ்லிம் மக்கள் மீது தங்கள் வன்முறையைக் காட்டுவதில்லை. ஆனால் ஐ.எஸ் அமைப்பு அப்படியானதல்ல. 'தனியே சுனி' முஸ்லிம்களின் நலன்களில் மட்டுமே அக்கறை கொள்கிறது . ஷியா பிரிவு முஸ்லிம்களையும் தன்னுடைய எதிரிகளாகவே இந்த அமைப்பு பார்க்கின்றது.

ஈராக், சிரியா போன்ற நாடுகளில் செயற்படும் இந்த அமைப்பு பற்றி இப்படி நீட்டிமுழுக்கத்தான் வேண்டுமா? என்று சிலர் கேட்கலாம். முழுக்க வேண்டிய நிலை உருவாகிவிட்டது. எங்கேயோ எட்டாத் தொலைவில் இருக்கும் அமைப்புத்தான் ஐ.எஸ் என்று எண்ணிக் கொண்டிருந்தவர்களுக்கு மரண அடி கொடுப்பது போல ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. சிரியாவில் நடைபெற்ற விமானக் குண்டு வீச்சுத்தாக்குதல் ஒன்றில் கடந்தவாரம் ஐ.எஸ் அமைப்பைச் சேர்ந்த பலர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் நிலாம் முஹ்ஸின். இலங்கையைச் சேர்ந்தவர். இதுதான் சிரியாவில் இடம்பெற்ற விமானக்குண்டுத் தாக்குதலால் இலங்கையில் அதிர்வை ஏற்படுத்திவிட்ட வண்ணத்துப்பூச்சி விளைவு.

நிலாம் முஹ்ஸினின் ஒன்றும் ஏழையல்ல. கல்வியறிவும் உள்ளவர். அவர் சில காலங்களுக்கு முன்னர் கலேவல, கொலன்னாவ பகுதிகளில் உள்ள சர்வதேசப் பாடசாலைகளின் அதிபராக அவர் பணியாற்றியுள்ளார். பாகிஸ்தான் பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றுள்ள நிலாம் கொழும்பு பல்கலைக்கழகத்திலும் விரிவுரையாளராகச் சில காலம் பணியாற்றியதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. இப்படி உயர் கல்விப்புலமை பெற்ற ஒருவருக்கும் ஐ.எஸ். அமைப்புக்கும் இடையில் எப்படித் தொடர்புகள் ஏற்பட்டன? இலங்கையில் இருக்கும் போதே அவர் ஐ.எஸ் அமைப்பில் இணைந்து கொண்டாரா அல்லது வேறு நாடுகளுக்குச் செல்லும் போது தொடர்பு ஏற்பட்டதா? நிலாமைப் போல வேறு இலங்கையர்களும் ஐ.எஸ் அமைப்பில் இணைந்துள்ளார்களா? எப்படி நிலாம் இலங்கையை விட்டு சிரியாவுக்குச் சென்றார்?இப்படி விடை தெரியாத பல வினாக்கள் எழுந்துள்ளன.

இந்த வினாக்களுக்கு விடை கண்டுபிடிக்கும் போது மிக இன்னும் அதிர்ச்சிகள் கிடைக்கும் என்பது திண்ணம். ஏனெனில் சிரியாவில் இலங்கையைப் பூர்விகமாகக் கொண்ட ஐ.எஸ் தீவிரவாதி கொல்லப் பட்டமையானது பலரின் சந்தேகப்பார்வையையும் இலங்கை மீது திருப்பச் செய்துள்ளது. ஏற்கனவே இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் அல்-கெய்தா அமைப்புச் செயற்பட்டு வருவதாக குற்றம் சாட்டப்பட்டு வந்தது. ஆயினும் அது நிரூபிக்கப்படாததால் அமெரிக்கா உள்ளிட்ட தரப்புகளால் அடக்கிவாசிக்கப் பட்டது. ஆனால், இப்போது ஐ.எஸ் அமைப்பில் இலங்கையைச் சேர்ந்தவர்களும் இருப்பது வெளிப்பட்டுவிட்டதால் பொதுபல சேனா போன்ற முஸ்லிம்களுக்கு எதிரான அமைப்புகள் இந்த விவகாரத்தைக் கையில் எடுத்து, தாம் செய்த அத்தனை பாவங்களையும் நியாயப்படுத்தும் நடவடிக்கையில் இறங்கப்போகின்றன. அத்துடன் முஸ்லிம் மக்கள் மீதான வன்முறைகளை முன்னரைக் காட்டிலும் அதிக வேகத்தோடு முன்னெடுக்கும் அபாயமும் காணப்படுகின்றது.

உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இந்த விவகாரம் தாக்கம் செலுத்தப்போகின்றது. இனியெல்லாம் முன்னரைப்போல மேற்கு நாடுகளுக்கு முஸ்லிம்கள் அவ்வளவு இலகுவாக விசாவினைப் பெற முடியாது. சந்தேகக்கண்ணோடுதான் அவர்களைத் தூதரக அதிகாரிகள் அணுகுவார்கள். அதேபோன்று மத்திய கிழக்கு நாடுகளுக்குக் வேலைவாய்ப்புத் தேடி முஸ்லிம்கள் போவதற்கும் கட்டுப்பாடுகள் வருவதற்கான சாத்தியங்கள் அதிகமுண்டு. ஏனெனில் அவர்கள் உண்மையாகவே வேலை தேடிப்போகின்றார்களா அல்லது ஐ.எஸ் அமைப்பில் சேரப்போகின்றார்களா என்ற கோணத்தில் தான் இனி அதிகாரிகள் நோக்குவார்கள். மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்பவர்களுக்கு மட்டுமல்ல அங்கிருந்து வருபவர்களுக்கும் விசாரணைகளும் சோதனைகளும் அதிகரிக்கவே போகின்றன.

இவற்றையெல்லாம் தாண்டி ஐ.எஸ் அமைப்பின் கரங்கள் இலங்கையில் பலமாக இருப்பது உண்மையானால் அது நாட்டின் நலனுக்கும் முஸ்லிம் மக்களின் எதிர்காலத்துக்கும் மோசமான விளைவுகளியே ஏற்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சிம்மசொப்பனம்-32

அனைவரும் கடற்கரைக்குச் சென்றனர். ஆச்சரியம்! காஸ்ட்ரோவும் அந்தப் பெண்ணும் தனியாகப் பிரிந்து சென்று சில மணி நேரம் பேசினார்கள்.

அன்றைதினம் கழிந்தது. மறு நாள் அந்தப் பெண்ணை தனியாக அழைத்துச் சென்று காஸ்ட்ரோ அவ்வளவு நீண்ட நேரத்துக்கு எதைப்பற்றிப் பேசினார் என்று ஆவலுடன் கேட்டனர். " அட போங் கப்பா" என்று ஏகத்துக்கும் சலித்துக் கொண்டாள் அந்தப் பெண். " புரட்சி பற்றி மூன்று மணி நேரம் அறு அறு என்று அறுத்து விட்டார்!'

அதற்காக காஸ்ட்ரோ ஒரு துறவி யாகவே வாழ்ந்தார் என்று நினைத்து விடக் கூடாது. அவருக்கு காதலிக் கவும் தெரியும். 'அழகிய பெண் ' என்று வகுப்புத் தோழர்கள் செல்ல மாக அழைத்த மிர்தா பிலார்ட் என் பவரை காஸ்ட்ரோ காதலித்தார். காஸ்ட்ரோவைப் போலவே இவரும் ஓரியட் மாகாணத்தைச் சேர்ந்தவர். பெரும் நிலப்பிரபுவின் மகள். காஸ்ட் ரோவின் குடும்பத்தை விட இவரது குடும்பம் செல்வச் செழிப்பானது இருவரும் திருமணம் செய்து கொள்ள முடிவெடுத்தனர். மிர்தா வின் அண்ணன் மிர்தாவிடம் , "காஸ்ட்ரோவை மிகவும் பிடித்திருக் கிறது. ஆனால் அவரது அரசியல் தான் கொஞ்சமும் பிடிக்கவில்லை" என்று மனம் விட்டுக் கூறினாராம்.. 1948 இல் இருவருக்கும் திருமணம் நடந்து முடிந்தது. அப்போது காஸ்ட் ரோவுக்கு 22 வயது. மிர்தாவுக்கு21. காஸ்ட்ரோவும் மிர்தாவும் தேனிலவைக் கழிக்க அமெரிக்கா சென்றனர். அமெரி க்காவில் அவருக்கு நண்பர்கள் யாரும் கிடையாது. நியூயோர்க்கில் உள்ள ஒரு ஹோட்டலில் அறை எடுத்துத் தங்கினார் கள். அறைக்குள் நுழைந்ததும் மிர்தா வை உள்ளே இருக்கச் சொல்வி விட்டு தனது கோட்டை மாட்டிக் கொண்டு கிளம்பி விட்டார் காஸ்ட்ரோ. சில மணி நேரம் கழித்து அறைக்கும் திரும்பும் போது கைநிறையப் புத்தகங்கள் . மார்க்ஸ் , எங்கெல்ஸ், லெனின்... இன்னபிற . மார்க்ஸின் டாஸ் காபிடல் தொகுதிகளை முதன்முதலாக இங்கே தான் வாங்கி னார் காஸ்ட்ரோ. நியூயோர்க் போகப் போகிறோம் என்று தெரிந்தவுடனே அங் கிருந்து என்னென்ன புத்தகங்களை வாங்கி வரவேண்டும் என்று நீண்ட தொரு பட்டியலை அவர் முன்னரே தயாரித்து வைத்திருந்தார்.

மிர்தாவைப் பொறுத்த வரையில் காஸ்ட் ரோவுடனான தேனிலவு அவ்வளவு ருசிகரமாக இருந்தது என்று சொல்ல முடியாது. காரணம், காஸ்ட்ரோ மிர்தாவு டன் செலவிட்ட நேரத்தை விட வெளியே சுற்றுவதில் செலவிட்ட காலம் தான் அதிகம். ஆர்தோ டாக்ஸ் கட்சி அலுவ லகத்தின் கிளையொன்று நியூயோர்க்கில் இருந்தது.



(தொடரும்)

## 3சொற்சிலம்பம் போட்டி இல. 683

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 4 | 5 | 6 | 7 |
| 8 | | | 9 | ■ | 10 | | |
| 11 | | ■ | 12 | 13 | ■ | | ■ |
| ■ | 14 | 15 | | | | ■ | 16 |
| 17 | ■ | 18 | | | ■ | 19 | |
| 20 | | | | ■ | 21 | | |
| | ■ | | ■ | 22 | | | |
| 23 | | | | | | ■ | ■ |

**மேலிருந்து கீழ்**

1- முன்னிலையில் .
2 - சீட்டுக்கட்டில் இதற்கு மவுசு அதிகம்.
3 - குத்து விழுவது இப்படி.
5 - சிரார்த்த நாள்.
6- தோட்டம்.
7 - மனிதர் மற்றும் தேவர்களை ஒரு வகைக்குள்ளும். ஏனையவற்றை மறு வகைக்குள்ளும் பிரிக்கும் தமிழ் முறை இது.
9- உண்ணுதல்.
13- இராசகுமாரன்.
15- மகிழ்ச்சி.
16-ஒரு பயிர் இனம்.
17- முன் ஆயத்தம் இன்றி கவிதை செய்ய வல்லவன்.
19- வானத்துக்கு இப்படியும் ஒரு பெயருண்டு.
21 - பசித்த பிள்ளை பாலுக்கு.....
22 - ஒரு கணிதக் குறியீடு.

**இடமிருந்து வலம்**

1 - மார்பின் பின்புறம்.
4- தீர்ப்பு வழங்குபவர்.
8- இனிப்பான தாவரவகை.
10 - வீட்டின் வெளிப்புறக் கட்டுமானம்.
11 - தாங்கள்.
12- குழந்தை.
14 - உட்செலுத்துதல்.
18 -செய்தி எடுத்துச் செல்பவன்.
19- மலை.
20- தூள் தூளாக உடைவதை இப்படிக் கூறுவர்.
21- மனம்
22- மறு.
23- பத்திரிகைக்கு இது அவசியம்.

அனுப்புபவர் பெயர்:-----------------------------------

விலாசம்:--------------------------------------------

--------------------------------------------------------

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### சொ. சி .போட்டி இல 683

■ சொற்சிலம்பம் போட்டி 683ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2015 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி ஆகும்.

■ விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே '2015, ஒகஸ்ட் 19 மற்றும் ஒகஸ்ட் 26ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப் பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

■ 1ஆம் பரிசாக ரூபா 250 உம், 2ஆம் பரிசாக ரூபா 150 உம், 3ஆம் பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

### போட்டி இல 680இல் பரிசு பெறுவோர்

**1** சி.மனோகரன், தபால் சேவகர், அஞ்சலகம், முள்ளியவளை.

**2** சு.ரக்சினி, தொட்டிலடி மத்தி, சண்டிலிப்பாய்.

**3** செல்லம்மா, மே/பா வே.இராசநாயகம், சோரன்பற்று, பளை.

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக் கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00மணி வரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ள லாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### பாராட்டுப் பெறுவோர்

**திருமதி .தி.புவனேஸ்,.** மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

**ரா.உஷாந்தினி.** 'சாருஜா' சிவன்கோவில் வீதி, புத்தூர்.

**வ.அ. அதிரூபசிங்கம்.** அம்மன் கோவிலடி, வல்வெட்டித்துறை.

**கே.இராஜகோபால்,** அடைக்கலம் தோட்டம், கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை.

**செல்வி. தட்சிகா தருமராஜா ,** இல : 43,கலைவாணி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

### சொற்சிலம்பம் போட்டி 681இன் விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.அகவல்.
2.பல்லி.
3.மிகு.
4.தலைவன்.
5.அன்னை.
8.வாசகம்.
10.மைதானம்.
13.சதி.
14.கரண்டி.
15.கலங்கு.
16.புதல்வி.
17.அதிக.
18.கட.
20.தம்.
21.கரு.

**இடமிருந்து வலம்**

1. அபரிமிதம்.
6. கல்.
7.குலை.
8.வான்.
9.வலிமை.
11.வஞ்சனை.
12.தாசன்.
14.கனதி.
15.கம்பு.
17.அரம்.
18.கல.
19.திண்.
20.தடங்கல்.
22.கடிதம்.
23.குருவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் அதிசயமான பாலம்



கோடய்க் வியாடக் மியன்மார் தேசத்தில் அமைந்துள்ளது. உலகத்தில் மிக உயரமான ரயில் பாலமாகக் கருதப்படுகின்றது



## ஐ.எஸ் தீவிரவாதிகளின் தற்கொலைப் படையில் கோழிகள்?

ஐ.எஸ் தீவிரவாதிகள் கோழிகளை தற்கொலைப்படை தாக்குதலுக்கு பயன்படுத்தி வருவது தெரியவந்துள்ளது.

ஈராக் மற்றும் சிரியாவில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ் தீவிரவாதிகள், தங்களது எதிரிகளின் முகாம்களில் தாக்குதல் நடத்த தற்கொலை படை அமைத்துள்ளனர்.

அவர்கள் உடலில் குண்டுகளை கட்டிச் சென்று வெடிக்கச் செய்கின்றனர். இதனால் குண்டாக செயல்படும் தீவிரவாதியின் உயிர் பறிபோகிறது.

எனவே, ஐ.எஸ் தீவிரவாதிகள் தற்கொலை தாக்குதலுக்கு புதிய திட்டத்தை செயல்படுத்த தொடங்கியுள்ளனர். அதாவது மனிதர்களுக்கு பதிலாக கோழிகளை பயன்படுத்துகின்றனர்.

கோழிகளின் உடலில் வெடிகுண்டுகளை கட்டி எதிரிகள் முகாம்களுக்கு அனுப்புகின்றனர்.

தற்கொலைப் படைத் தாக்குதலுக்காக பிடித்து வரும் கோழிகளை நன்கு பழக்கி பின்னர் உடலில் வெடிகுண்டைக் கட்டி விடுகின்றனர்.

அதன் பின்னர் அதை எதிரி முகாமுக்குள் அனுப்பி வைத்து ரிமோட் மூலம் வெடிக்கச் செய்து தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர்.

சமீபத்தில் இது போன்ற தாக்குதல் பலூஜா நகரில் நடத்தியுள்ளார்கள்.





யானைக்குட்டி நீர் அருந்தும் காட்சி...

# ஆட்டுப்பால் குடிக்கும் குறும்புக்கார நாய்

முதுகுளத்தூர்: முதுகுளத்தூர் அருகே ஆப்பனூரில், தினமும் நாய்க்கு பால் கொடுக்கும் வெள்ளாட்டை பொது மக்கள் வியப்புடன் பார்த்து செல்கின்றனர்.

முதுக்ளத்தூர் அருகே உள்ள ஆப்பனூர் அரிய நாதபுரத்தைச் சேர்ந்த விவசாயி முருகேசன். இவர் வளர்த்து வரும் வெள்ளாடு சமீபத்தில் குட்டிகளை ஈன்றது. அந்த குட்டிகள் தாய் ஆட்டிடம் பால் குடிக்கும் போது, முருகேசன் வளர்க்கும் நாயும், ஆட்டுக் குட்டி போல் வெள்ளாட்டிடம் பால் குடித்து வருகிறது.

இதுகுறித்து முருகேசன் கூறுகையில், மேய்ச்சலுக்குச் சென்ற ஆடு, வீடு திரும்பிய்வுடன் தான் ஈன்ற குட்டிகளுக்கு பால் கொடுக்கும் முன், நாய்க்கு பால் கொடுக்கிறது. பின்பு தான் தனது குட்டிகள் பாலை குடிக்க ஒத்துழைக்கிறது. "நாயும் ஆடு வந்தவுடன், தாயை பார்த்த குழந்தை ஓடுவதைபோல், ஓடோடி சென்று பால் குடித்துவிட்டு, சிறிதுநேரம் ஆட்டுடன் விளையாடுகிறது," என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிம்புவின் தொடர் படங்கள்



செல்வராகவன், கௌதம் மேனன், கிருத்திகா உதயநிதி, அமீர் படங்களில் அடுத்தடுத்து நடிக்க இருக்கிறார் சிம்பு. இதில் அமீர் இயக்கும் படத்தில் சி ம்புவுடன் விஜய் சேதுபதியும் நடிக்கிறார்.

## மணிகண்டன் படங்கள்

ஏகப்பட்ட விருதுகளோடு வசூலையும் வாரிக் குவித்த காக்கா முட்டை படத்தின் இயக்குநர் மணிகண்டன் ஏற்கனவே விதார்த் நடிப்பில் குற்றமும் தண்டனையும் படத்தை இயக்கியிருந்தார். இந்தப் படம் இளையராஜாவின் இசையில் சிக்கிரமே வெளியாக இருக்கிறது. இடையில் அவரின் அடுத்த படம் பற்றிய அறிவிப்பும் வெளியாகி இருக்கிறது. கோபுரம் ஃபிலிம்ஸ் அன்புச்செழியன் தயாரிக்க விஜய் சேதுபதி நடிக்க இருக்கிறாராம். விஜய் சேதுபதி ஆரம்பத்தில் கலக்கிய நகைச்சுவைப் பாணியில்தான் இந்தப் படத்தை இயக்க உள்ளாராம் மணிகண்டன்.

## ஆவலுடன் காத்திருப்பு!

## 2016இல் ராஜமௌலி படப்பிடிப்பு



சூர்யா தெலுங்கில் தன் வியாபாரத்தை விரிவுபடுத்த எண்ணி,ராஜமௌலி படத்தில் நடிக்க முயற்சி செய்யதார். எனினும் அவரோ அடுத்த ஒன்றரை வருடத்தில் மசாலாவையும், குடும்பப் பாசத்தையும் கலந்து அடிக்கும் இயக்குநரான திரிவிக்ரம் னிவாஸ் இயக்கத்தில் நடிக்க இருக்கிறார். '24' , சிங்கம் 3, இயக்குநர் வினோத் படம் முடிந்ததும் 2016ல் இந்தப் படம் தொடங்குகிறகாம்.



## வில்லனாக நடிக்கும் அருண்

## நயன்தாராவின் நல்ல மனசு

பாபநாசம் படத்தை இயக்கிய ஜீது ஜோசப் அடுத்து இயக்கும் படத்தில் முக்கியமான ஒரு காட்சி யில் நடிக்கக் கேட்க, சம்பளமே வாங்காமல் நடித்துக் கொடுத்து இயக்குநரை ஆச்சரியத்தில் மூழ்கடித்தாராம் நயன்தாரா.

## சிரிப்புப் பேய்தான்!

நாயகனாக நடித்த படங்கள் நல்ல வரவேற்பைப் பெற்றதால் அடுத்தடுத்து நடிக்கும் படங்களை மிக கவனமாகத் தேர்ந்தெடுக்கிறாராம் சந்தானம். அடுத்து சூலொன்னு சபா நிகழ்ச்சி இயக்குநர் ராம்பாலா இயக்கும் படத்தில் நடிக்க இருக்கிறார். இந்தப் படம் பேய்ப்படம் என்கிறார்கள்.



## அஜித்தின் அடுத்த படம்

அஜித் நடிக்கும் அடுத்த படத்தை கே.வி. ஆனந்த் இயக்குகிறார். படத்தயாரிப்பில் மிகவும் தீவிரமாக இறங்கியிருக்கும் சத்யஜோதி ஃபிலிம்ஸ் ரஜினியின் மூன்று முகம் படத்தை அஜித் நடிப்பில் மறுபதிப்பு செய்யத் திட்டமிட்டார்களாம். ஆனால் கே.வி.ஆனந்த் கூறிய கதையும் சூப்பராக இருக்க, முதலில் அதையே எடுக்கலாம் என அஜித்தும் கூறினாராம். அதனால் கே.வி. ஆனந்த் படம் முதலில் உருவாகிறதாம். சுஜாதா எழுதிய நாவலை மையமாகக்கொண்டு திரைக்கதை அமைத்திருக் கிறார்களாம்!

## உற்சாகமான நடிப்பு

சன்னி லியோன் நல்ல கதாபாத்திரங்களில் நடிக்கும் ஆசையோடுதான் வந்தாராம். ஆனால், திரையுலகப் புண்ணியவான்கள் எல்லோரும் அவரைக் கவர்ச்சிக்கு மட்டும் பயன்படுத்த நடிப்புக்கு முழுக்குப் போட முடிவெடுத்திருக்கிறார். இந்த நிலையில் பிரபுதேவாவை எதேச்சையாக சந்திக்க, நான் இயக்கும் படத்தில் சின்ன கெஸ்ட் ரோல் இருக்கு, நடியுங்கள். அடுத்த படத்தில் நிச்சயம் உங்களை முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க வைக்கிறேன் என்றாராம். உற்சாகமாக நடித்துக் கொடுத்து முழுக்குக்கு முழுக்குப் போட்டுள்ளார் சன்னி லியோன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திருப்பு!

மெட்ராஸ் நாயகி கேத்தரின் தெரஸா குத்தம்மா தேவி படத்தின் வெளியீட்டுக்காக ஆவலுடன் காத்திருக்கிறார். ஒரே நேரத்தில் தமிழில் அதர்வாவின் கணிதன், விஷ்ணு விஷால் நடிக்கும் வீர தீர சூரன், சிம்பு நடிப்பில் செல்வராகவன் இயக்கும் கான் ஆகிய படங்களில் நடித்துக்கொண்டிருக்கிறார். தவிர, இரண்டு புதுப்பட வாய்ப்புகளையும் கையில் வைத்திருக்கிறார்.



# நாயகி ஆவியானது எப்படி?

பேய்ப்படங்களுக்குரிய பின்னணிஇசை, பூனை, வெள்ளைஉடை உருவம், கோடூர முகங்களுடைய உருவங்கள் ஆகிய எதுவுமில்லாமல் வந்திருக்கும் பேய்ப்படம். ஆவிகளுடன் பேசுகிற கதாநாயகன் உதயாவுக்கு மட்டும் நாயகி கனிகாசவுத்ரி தெரிகிறார். நாயகி ஆவியானது எப்படி? என்பதை நாயகன் கண்டறிவதுதான் கதை. தொலைக்காட்சியொன்றில் ஆவிகளுடன் பேசும் நிகழ்ச்சியை நடத்திப் புகழ்பெற்றிருக்கும் உதயா, அந்த நிகழ்ச்சியை மக்கள் முன் நடத்துவதற்காக மலேசியா செல்கிறார். அங்கு காவல்துறைஅதிகாரி நாசர் முன் நடக்கும் நிகழ்ச்சியில், ஏற்கனவே நடந்த கொலையைச் செய்தது யார்? என்கிற விவாதம் வருகிறது.

அதன் விளைவாக உதயா அங் கேயே தங்கவேண்டி வருகிறது. வாடகைக்கு வீடு பிடித்துத் தங் கப்போக அந்தவீட்டில் நாயகி கனிகாசவுத்ரி ஆவியாக இருக்கிறார். நாயகன் கண்களுக்கு மட்டும் தெரியும் அவரைப் பற்றிய விவரங்களைச் சேகரிக்கத் தொடங் கும்போது பல சிக்கல்கள். உதயாவுக்கு இந்தப்படம் சொல்லிக்கொள்ளுமளவுக்கு அமைந்திருக்கிறது.

ஆவிகளுடன் பேசும் காட்சிகளில் தெம்பாக இருக்கிறார். காதல் மற்றும் மோதல்க்காட்சிகளில் இன்னும் முன்னேறவேண்டும். ஆவி என்று சொல்லமுடியாதபடி அழகான நாயகி கனிகாசவுத்ரி இருக்கிறார். அவர் ஆவி என்பதற்காக அவருடைய கூந்தலைப் பறக்கவிட்டதைத் தவிர வேறெதுவும் செய்யாத இயக்குநர் காண்டிபனைப் பாராட்டலாம்.

நான் சாகவில்லை என்று சொல்லிக்கொண்டு அறிமுகமாகும் நாயகி கனிகாவுக்கு இது அறிமுகப்படம். நல்லஅறிமுகமாக அமைந்திருக்கிறது. அழகு கூட இல்லாமல் தனக்குக் கொடுத்த வேடத்தையும் சரியாகச் செய்திருக்கிறார். கம்பீரமான காவல்துறைஅதிகாரியாக நாசர். மூடநம்பிக்கைகளை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று சவால் விடுவதும், உண்மைகள் தெரிந்ததும் நாயகனுக்கு ஆதரவாக அவர் இருப்பதும் பொருத்தமாக இருக்கிறது.

நகைச்சுவைக்கென்று ஜெகன், முனிஸ்காந்த், தேவதர்ஷினி ஜோடி ஆகியோர் இருக்கிறார்கள். முனிஸ்காந்த் ஜோடிகளை வைத்து க்கொண்டு இரட்டைஅர்த்த வசனங்களை அதிகம் வைத்திருக்கிறார்கள். ஒளிப்பதிவாளர் ராஜேஷ்கேநாராயணனின் ஒளிப்பதிவில் நாயகியும் மலேசியாவும் அழகு. விஜய்ஆண்டனி, ஸ்ரீகாந்த்தேவா ஆகிய இருவர் இசையமைத்தும் பாடல்கள் பெரிதாகக் கைகொடுக்கவில்லை. சொல்லவந்த விசயத்தைச் சரியாகச்

வில்லனாக நடிக்கும் அருண்

என்னை அறிந்தால் படத்தில் வில்லனாக நடித்த அருண் விஜய்க்கு மற்ற மொழிகளிலும் வில்லன் காட்சியில் நடிக்க அழைப்பு வர, கதையில் தனக்கான முக்கியத்துவம் உள்ள படங்களில் நடிக்கிறார். இவன் வேற மாதிரி கன்னட மறுபதிப்பைத் தொடர்ந்து, தெலுங்கில் சீனு வைட்லா இயக்கத்தில் ராம்சரண் தேஜா நடிக்கும் ஒரு படத்தில் வில்லனாக நடிக்கிறார். அருண் விஜய்யின் தடையறத் தாக்க படத்தில் முக்கிய வேடத்தில் நடித்து, தற்போது தெலுங்கின் நம்பர் வன் நடிகையாக இருக்கும் ராகுல் ப்ரீத் சிங்தான் இந்தப் படத்தின் நாயகி.

## குண்டான அனுஷ்கா

பாகுபலி வெற்றியை சந்தோஷமாகக் கொண்டாடிய அனுஷ்கா ரசிகர்கள், அனுஷ்காவை நேரில் பார்த்து அதிர்ச்சி அடைந்து விட்டார்களாம். காரணம், பாகு பலி கொண்டாட்டத்தில் கலந்துகொண்ட அனுஷ்கா முன்பை விட இரு மடங்கு குண்டாக இருந்தாராம். இஞ்சி இடுப்பழகி படத்துக்காகத்தான் இந்த நிறை யாம். இதற்காகத் தன் உயிருக்கு உயிரான யோகா வையும், உடற்பயிற்சியையும் ஒரு மாதம் செய்ய வில்லையாம். மாறாகக் கையில் கிடைத்த வற்றை யெல்லாம் சாப்பிட்டு குண்டாகி இருக்கிறார்.



### நயன்தாராவின் ஏக்கம்

என்னதான் தென்னிந்தியாவின் முன்னணி நடிகையாக இருந்தாலும் நயன்தாராவுக்கு நீண்ட கால ஏக்கம் இயக்குநர் மணிரத்னம் இயக்கத்தில் நடிக்க வேண்டும் என்பது. மணிரத்னம் இயக்கும் அடுத்த படத்தில் கார்த்தி, துல்கர் சல்மான், ஸ்ருதிஹாசன் ஆகியோருடன் நயன்தாராவும் நடிக்கப் போகிறார். அதேபோல் ஏ.ஆர். ரஹ்மான் இசையில் நயன்தாரா நடிக்கும் முதல் படமும் இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

...படம்

...ம் அடுத்த
...பி.
...ருக்கிறார்.
...ல்
...ாக இறங்
...யஜோதி
...னியின்
...டத்தை
...
...ய்யத்
...ளாம்.
...பி.ஆனந்த்
...ம்
...க்க,
...யே
...ன
...னாராம்.
...வி.
... முதலில்
...ம்.
...ய
...காண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தங்கப் பானையில் கஞ்சி



அரசர் ஒரு நாள் நகர் வலம் போனார். வழியில் அரசரைக் காணுகிற மக்கள் எல்லாம் அரசருக்கு ஒரு மரியாதை கலந்த வணக்கம் தெரிவித்தனர்.

செல்லும் வழியில், சந்தையில் இருந்த கடை ஒன்றை பார்த்துக் கடைக்குள் நுழைந்தார் அந்த அரசர். அவருடன் அமைச்சர் மற்றும் சில வீரர்களும் உடன் சென்றனர்.

கடையிலிருந்த வயதானவர் அரசரை வரவேற்று, அவர் குடிப்பதற்குச் சிறிது கஞ்சியும் கொடுத்தார்.

அரசரும் வயதானவரின் அன்புக்கு அடிபணிந்து அந்தக் கஞ்சியைச் சிறிது கூட மிச்சம் வைக்காமல் வாங்கிக் குடித்தார்.

சிறுது கஞ்சியைக் குடித்த அரசரைப் பார்த்து அமைச்சர், அரசே, ஆச்சரியமாக இருக்கிறதே... நீங்கள் இப்படி ஒரு நாளும் எந்த உணவும் உண்டதில்லையே என வியப்புடன் கேட்டார்.

ஆமாம் அமைச்சரே, இந்தக் கஞ்சி மிகவும் சுவையாக இருக்கிறது. நீண்ட காலத்துக்குப் பிறகு சுவையான ஒரு உணவினைச் சாப்பிட்டுள்ளேன் என சொன்னார்.

பின் அரசர் வயோதிகரைப் பார்த்து, முதியவரே, இந்தக் கஞ்சி மிகவும் சுவையாக இருக்கின்றதே... இதனை நீர் எப்படிச் செய்கின்றீர்? எனக் கேட்டார்.

முதலில் என்னிடமுள்ள தங்கப்பாயை விரித்து, கஞ்சிக்குத் தேவையான பொருட்களை எல்லாம் தயார் செய்து அப்பாயின் மீது வைத்து விட்டு அடுப்பினைத் தயார் செய்வேன், பின் என்னிடமுள்ள தங்கப்பானையை எடுத்து அதனை விறகுகள் நிறைந்த அடுப்பின் மேல் வைத்து தயார் செய்த அனைத்துப் பொருட்களையும் அதனுள் இட்டு நன்றாகப் பதமாகும் வரை அடுப்பினில் வைத்துவிடுவேன். பின் அடுப்பினில் இருந்து இறக்கிய கஞ்சியினை அதனை விற்பனைக்காகக் கொண்டு செல்லும் என்னுடைய மற்ற தங்கப்பானையினுள் இட்டு அதனை சந்தைக்குக் கொண்டு வருவேன். அதைத்தான் நீங்களும் இப்போது குடித்தீர்கள் என்றார்.

அரசருக்கு மிகவும் வியப்பாக இருந்தது. தங்கப்பொருள்கள் வைத்துக் கொண்டிருப்பவர் இப்படி கஞ்சி காய்ச்சி ஏன் விற்பனை செய்ய வேண்டும்? என்று சிறு சந்தேகமும் எழுந்தது.

அரசர், சரி, முதியவரே நான் உங்கள் வீட்டுக்கு வந்து நீங்கள் செய்வதைப் பார்க்க வேண்டும் என்றார்.

தாராளமாக, நீங்கள் வரலாம். உங்கள் காலடி இந்த ஏழையின் வீட்டில் படுவதற்கு மிகவும் பாக்கியம் பெற்றது என்று கூறிஅழைத்துச் சென்றார்.

முதியவரும் கஞ்சியினை தயாரித்தார். ஆனால் முதியவர் கூறியது போன்று அங்கு தங்கப்பாயும், பானையும் போன்றவற்றைப் பயன்படுத்த வில்லை.


எல்லாம் சாதாரண பொருட்களாகவே காணப்பட்டது.


இதனைப் பார்த்த அரசருக்கு மிகவும் கோபம் வந்து விட்டது.

கோபத்தை அடக்கிக் கொண்ட அரசர் முதியவரிடம், நீங்கள் கூறும் போது என்னிடம், தங்கப்பாய், தங்கப்பானை என்று சொன்னீர்கள். ஆனால் இங்கே எல்லாம் சாதாரணமாகவே இருக்கின்றதே என்றார்.

இதனைக் கேட்ட முதியவர், அரசரே நீங்கள் கேட்டது என்னுடைய தொழிலைப்பற்றி... என்னுடைய தொழில் எனக்கு மிகவும் உயர்ந்தது. அது மட்டுமல்லாமல் நான் தொழில் செய்ய பயன்படுத்தும் பொருட்களோ மிகவும் தகுதி வாய்ந்ததாக எனக்குத் தோன்றுகிறது. அதனால் அரசராகிய தங்களுக்கு ஏற்றபடி என் தொழிலைச் சிறிது உயர்த்திக் கூறினேன் என்றார் அமைதியாக.

வயதானவர் சொன்னது அரசருக்கும் ஏற்புடையதாக இருந்தது.





இந்த இரு படங்களுக்கு இடையே உள்ள வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள்.

## வீட்டுக் கணக்கு



ஆசிரியர் - என்னடா இது கணக்கு நோட்டுல பால் கணக்கு, மளிகைக்கணக்கு • எல்லாம் எழுதியிருக்கின்றாய்?

மாணவன் - நீங்கள் தானே ரீச்சர் சொன்னனீங்கள்?

ஆசிரியர்; - நான் எப்போது சொன்னேன்.

மாணவன் - நேற்று மாலை தான்.. எல்லோரும் வீட்டுக் கணக்கை ஒழுங்கா எழுதிக்கொண்டு வாங்கோ என்று சொன்னீங்களே? மாங்கிட்டீங்களா?




## குழந்தைகளே

ஒன்றும் ஒன்றும் இரண்டு
ஒன்றுமில்லாததற்கு செய்யாதே முரண்டு
இரண்டும் இரண்டும் நாலு
இருக்கணும் வாழ்க்கையில் சவாலு
மூன்றும் மூன்றும் ஆறு
முன்னேறிப் படைக்கணும் வரலாறு
நான்கும் நான்கும் எட்டு
நல்லது அல்லாததை விரட்டு
ஐந்தும் ஐந்தும் பத்து
ஐம்புலன் அடக்கினால் இல்லை ஆபத்து
ஆறும் ஆறும் பனிரெண்டு
ஆறுவது சினம் எனப் பழகிவிடு
ஏழும் ஏழும் பதினான்கு
ஏழைக்கு என்றும் மனமிரங்கு
எட்டும் எட்டும் பதினாறு
எட்டும் வரையில் எதிலும் போராடு
ஒன்பதும் ஒன்பதும் பதினெட்டு
உண்பதில் வாயை நீ கட்டு
பத்தும் பத்தும் இருபது
தித்திக்கும் திருப்புகழ் தினமோது

- சரஸ்வதி ராசேந்திரன்.

## வர்ணம் தீட்டலாம் வாங்க





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப்புனல்



## உரத்தபந்தம்

எந்த உறவைச் சொல்லியும்
நூறு வீதம் உன்னை நீ
அடையாளப்படுத்த முடியாது
அம்மா என்று சொன்னால்
நீ மகனாகவும் இருக்கலாம்
மகளாகவும் இருக்கலாம்
மகன் என்று சொன்னால்
நீ அப்பாவாகவும் இருக்கலாம்
அம்மாவாகவும் இருக்கலாம்
அண்ணா என்று சொன்னால்
நீ தம்பியாகவும் இருக்கலாம்
தங்கையாகவும் இருக்கலாம்
தாத்தாவுக்கும் அப்படித்தான்
பாட்டிக்கும் அப்படித்தான்
பேரனுக்கும் அப்படித்தான்
பேத்திக்கும் அப்படித்தான்
மாமாவுக்கும் மாமிக்கும்
மருமகனுக்கும் மருமகளுக்கும்
சித்தப்பன் சின்னம்மா
அனைவருக்கும் அப்படித்தான்
காதலன் என்று நீ சொன்னால்
நிச்சயம் காதலி நீ
கணவன் என்று நீ சொன்னால்
நிச்சயம் மனைவி நீ
இரத்த பந்தங்களை விட
உன்னை அடையாளப் படுத்தும்
உரத்த பந்தங்கள் இவை

- மது மதி



## தோல்வியின் தழும்புகள்

அவள் விழிகளோடு
என் விழிகள் கலந்து
வார்த்தைகளோடு
வார்த்தைகள் கலந்து
இன்னும் இன்னும் நெருங்கி
எனக்குள் அவளையும்
அவளுக்குள் என்னையும்
தேட முற்பட்டு
இருவருமே தோல்வியைத் தழுவி
விவாகரத்துக்காய் காத்திருக்கிறோம்

இடையில் ஏதோ மின்னலாய்
ஒரு வாழ்க்கை
ஊரறிய மேள தாளம்
வீடு வீடாகப் போசனம்
புதுத்தம்பதியை அயல் பார்த்து
மெலிதான புன்னகை சிந்தி
சுமைகளே இல்லாமல் வாழ்க்கையை
வாழ்ந்து பார்த்தோம்
எல்லாம் மறந்து போகட்டும்
மீண்டும் அவளைக்
காதலிக்கவேண்டும்
கல்யாணம் என்ற
வார்த்தையையும்
சடங்கையும் மறந்துகொண்டு

நிர்வாணி

## இனிமையின் உணர்வுகள்

நெளிவு சுழிவு
கண்டு கொண்டேன்
பெண்ணவளே
உன்னிடம்
இனிய உறவாய்
அமைந்து கொண்டாய்
என்னவள் நீ என்னிடம்
பூக்களை தாண்டிய
வாசனை அழகியவள்
பாக்களை தாண்டிய
பருவத்து வெண்நிலா
அச்சத்து அழகியே
லச்சத்து விருப்பமே
இனிமையில் கலந்த
உயிரான பருவநிலா
குயில்களின் குரலினை
சேர்த்து வைத்து
பாட்டிசைத்தாய்
மயில்களின்
அழகினை
கூட்டி வந்து
வெளிப்படுத்தினாய்
அன்னத்தின் பெடையென
அதிசயமாக
உற்று நோக்க
கன்னத்தைக் கிள்ளி
சேர்த்தணைத்து
கட்டிப் போட்டாய்
மெல்லிய பருவவில்
கண்ட பின்
என்னுள்ளே
இணைந்த அகமதில்
இனிமையின்
உணர்வுகள்

வே.வே. அகிலேஸ்வரன்,
மருதங்கேணியூர்



## உயிர்நட்பு

கண்டதும் கை குலுக்கி
கண நேரத்தில் காணாமல்
போகும்...
மின்னல் நட்பு! .........
சந்திப்பில் மட்டும் சரசமாடும்-
பிறகு சிந்திக்க மறந்து போகும்...
தாமரை இலை மேல்
தண்ணீர் நட்பு!
காரியம் முடிந்ததும்
வீரியம் குறைத்து
விலகிப் போகும்....
சந்தர்ப்பவாத நட்பு! .......

தூரத்தில் இருந்தாலும்
நெஞ்சின் ஓரத்தில்
நினைந்து கசிந்துருகும்...
ஓயாத அலை நட்பு! ......


கூட இருந்தே கூடி மகிழ்ந்திருந்து
குழி தோண்டி புதைத்துப்
போகும்...
கூடா நட்பு! ..........

இன்பமிருக்க இணைந்திருக்கும்
துன்பம் வர தூரப் போகும்...
துச்ச நட்பு! ..

நித்தியம் என்று சத்தியம்
செய்யும்
புரிதலில் பிணக்கு கொண்டு
பிரிந்து போகும்....
புத்தி கெட்ட நட்பு! .........

நட்பின் தொடக்கம் முதல்
நாடித் துடிப்பின் அடக்கம் வரை
கூடி வரும்....
உயிர் நட்பு!...

அரவிந் யோகன்



## என்னவென்று புரியும்...

சில சமயம்
நினைப்பதுண்டு...
பிறந்தது ஏன் என்று?
வாழ்வது வீண் என்று...

சில சமயம்
நினைப்பதுண்டு...
இதை முடித்தது
நானா என்று...

சில சமயம்
நினைப்பதுண்டு...
இருப்பது எதற்காக என்று?
துடிப்பது எதனால் என்று....

சில சமயம்
நினைப்பதுண்டு...
உன்னால் முடியுமென்று...
உண்மையில், நான்
அறிவுப்பெட்டகமுமில்லை...
அழுகிய முட்டையுமில்லை...

அறிவைத் தேடிய
என் பயணத்தில்
அனுபவமே படிக்கட்டுகள்...

வாழ்க்கைப் பாதையே
என் வழித்தடங்கள் ....

- சங்கீதா செந்தில்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னையின் திருவல்லிக்கேணி பகுதியில் குடிசை மாற்று வாரியத்தில் தனுஷ், தனது நண்பர்களான ரோபோ சங்கர், கல்லூரி வினோவுடன் சேர்ந்து பந்தயப் புறாக்களை வளர்த்து வருகிறார். அதே ஏரியாவில் தாதாவாக இருக்கும் சண்முகராஜனுக்கும் இன்னொரு ரவுடிக்கும் நீண்டகாலமாகப் பிரச்சினை இருந்து வருகிறது. இந்த நிலையில், ஒருநாள்



# 'மாரி' பார்த்து விட்டுவரலாம்

சண்முகராஜனுக்கு எதிரான ரவுடியை தனுஷ் தீர்த்து கட்டுகிறார்.

அன்றுமுதல், தனுஷை தனது கைக்குள் போட்டுக்கொண்டு, திருவல்லிக்கேணி பகுதியையும் அவருக்கு தாரை வார்த்துக் கொடுக்கிறார் சண்முகராஜன். அந்தப் பகுதிக்குள் பெரிய தாதாவாகிவிட்ட தனுஷ், தனது நண்பர்களுடன் சேர்ந்து, ஏரியாவுக்குள் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரிடமும் கலாட்டா செய்கிறார். இதனால், அந்தப் பகுதியில் உள்ள அனைவரும் தனுஷை வெறுக்கிறார்கள்.

இந்த நிலையில், திருவல்லிக்கேணி பகுதிக்கு புதிய 'இன்ஸ்பெக்ட'ராக விஜய் யேசுதாஸ் பதவியேற்கிறார். அந்தப் பகுதியில் ரவுடித்தனம் செய்யும் தனுஷ் பற்றி, பொலிஸான காளியிடம் கேட்டு அறிந்துகொள்கிறார். தனுஷ் ஒரு கொலை செய்தது உறுதி என்றாலும், அவர்தான் கொலை செய்தார் என்பதற்கும் சாட்சியும், ஆதாரமும் இல்லாததால் அவரை கைது செய்யமுடியாமல் தவிக்கிறார் விஜய் யேசுதாஸ்.

இந்த நிலையில், தனுஷ் இருந்த இடத்துக்கு தனது அப்பா, அம்மாவுடன் குடிவருகிறார் காஜல். 'பெஷன் டிசைன'ரான காஜல், அந்தப் பகுதியிலேயே ஒரு துணிக்கடையையும் ஆரம்பிக்கிறார். தனது பகுதிக்குள் தன்னுடைய அனுமதி இல்லாமல் கடையை ஆரம்பித்த காஜலுடைய கடைக்கு சென்று தனுஷ் கலாட்டா செய்கிறார். இதனால், தனுஷ் மீது காஜல் வெறுப்படைகிறார்.

ஒருகட்டத்தில் தனுஷ் அவளுடைய கடைக்கு தானும் பங்குதாரார் என்று சொன்னதும், காஜல் அதிர்ச்சியாகிறார். ஒருநாள், காஜலின் கடை ஆரம்பிப்பதற்கு பணம் கொடுத்த கோபி கடனை திருப்பி கொடுக்குமாறு காஜலிடம் கலாட்டா செய்கிறார். இந்த பிரச்சினையில் தனுஷ் தலையிட்டு, காஜலுக்கு உதவி செய்கிறார். அன்றிலிருந்து தனுஷ் மீது காஜலுக்கு தனி மரியாதை வருகிறது.





அதன்பின்னர் தனுஷ் பின்னாலேயே சுற்றி வருகிறார் காஜல். தன்னுடன் நெருங்கி பழகும் காஜலிடம், ஒருநாள் தனுஷ் குடித்துவிட்டு போதையில் தான் கொலை செய்ததை உளற, அதை அவள் தனது செல்போனில் பதிவு செய்து பொலிஸிடம் ஒப்படைக்கிறாள். பொலிஸ், தனுஷை கைது செய்வதற்கு சரியான ஆதாரம் கிடைத்ததும் அவரை கைது செய்து ஜெயிலில் அடைக்கிறது. தனுஷ் ஜெயிலுக்குள் போனதை கண்டு அந்தப் பகுதி மக்கள் வெடித்து கொண்டாடுகிறார்கள்.

கடைசியில், தனுஷ் நல்லவனா? கெட்டவனா? என்பது காஜல் மற்றும் அந்தப் பகுதி மக்களுக்கு புரிந்ததா? நட்புடன் பழகிய காஜல் தனுஷை பொலிஸில் மாட்டிவிட காரணம் என்ன? என்பதை பிற்பாதியில் விளக்கியிருக்கிறார்கள். தனுஷ் படம் முழுக்க கழுத்து நிறைய தங்க சங்கிலியுடனும், வேஷ்டி, பலநிறமான சட்டையுடனும், ஒரு ரவுடிபோல் வலம் வந்திருக்கிறார். முறுக்கு மீசையும், காதோரத்தில் பெரிய கிர்தாவுடனும் பார்க்க அச்சு அசல் ரவுடியாகவே நமக்கு தெரிகிறார். அதேபோல், நடிப்பிலும் எதார்த்தம் மீறாமல் நடித்திருக்கிறார். நடனத்திலும் தனித்துவத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். ஆரம்ப பாடலில் இவர் ஆடும் நடனம் ரசிகர்களை தியேட்டர்களில் ஆட வைத்திருக்கிறது.

காஜல், படத்தில் ஒரு 'பேஷன் டிசைன'ராக அழகாக வலம் வந்திருக்கிறார். இவருடைய நடிப்பும் பிரமாதம். தமிழில் முதன்முதலாக நடிகராக அறிமுகமாகியிருக்கும் விஜய் யேசுதாஸ், வில்லனத்தனம், பொலிஸ் என இரண்டிலும் சமபங்குடன் நடித்து கைதட்டல் பெறுகிறார். முதல் படம் என்று சொல்ல முடியாத அளவுக்கு இவருடைய நடிப்பு அற்புதம்.

தனுஷ் நண்பர்களாக வரும் ரோபோ சங்கரும், கல்லூரி வினோவும் படத்தின் காமெடியில் கலக்குகின்றார்கள். படத்தில் தனுஷைவிட இவர்களுக்குத்தான் அதிக வசனாங்கள் உள்ளது. தனுஷ் பேசும் ஒவ்வொரு பேச்சுக்கும் இவர்கள் கொடுக்கும் பதில் வசனாங்கள் தியேட்டரில் சிரிப்பலையை வரவழைத்திருக்கிறது. மற்றபடி, படத்தில் நடித்திருக்கும் காளி, சண்முகராஜன், மெட்ராஸ்' கோபி ஆகியோரும் தங்கள் கதாபாத்திரத்தை செவ்வனே செய்திருக்கிறார்கள்.

இதுவரை காதல் கதைகளை எடுத்துவந்த பாலாஜி மோகன், முதன்முதலாக ஒரு ரவுடியிசம் சார்ந்த ஒரு கதையை படமாக்கியிருக்கிறார். முதல் முயற்சியே அவருக்கு வெற்றியைக் கொடுத்திருக்கிறது. கதையில் ரவுடியிசம் இருந்தாலும், படத்தில் பெரும்பாலான காட்சிகளில் அரிவாள், கத்தி என்று எதுவும் இல்லாமல் படமாக்கியிருப்பது சிறப்பு. இப்படத்தில் தனுஷ் பேசும் வசனங்கள் எல்லாம் ரசிகர்களை கவரும்படி வைத்திருப்பது மேலும் சிறப்பு. படம் ஆரம்பம் முதல் கடைசி வரை விறுவிறுப்புடன் செல்கிறது.

அனிருத் இசையில் அனைத்து பாடல்களும் படத்துக்கு மெருகைச் சேர்த்திருக்கிறது. அவற்றை திரையில் பார்க்கும்போது இன்னும் அழகாக இருக்கிறது. பின்னணியும் இசையும் நன்றாக இருக்கிறது. ஓம் பிரகாஷின் ஒளிப்பதிவும் அருமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்புப் பெண்ணே





கறுப்புப் பெண்ணே! கறுப்புப் பெண்ணே!
கவலை ஏனம்மா? - உன்
உறுப்பில் ஒன்றும் ஊனம் இல்லை!
உண்டு மகிழம்மா!

பெண்என் றாலே இகழும் நாட்டில்
பிறந்து விட்டாயே! - நீ
கண்முன் இன்னும் கறுப்பாய்த் தோன்றி
கசந்து விட்டாயே!

கறுப்பென் றதுமே வெறுத்து வீட்டில்
கழற்றி விட்டார்கள்!
பொறுப்பில் லாத பெற்றோர் உன்னைப்
பொசுக்கி விட்டார்கள்!

சிறாரும் உன்னைக் கேலி செய்து
சிறகொ டித்தார்கள்!
பொறாமல் நீயும் புழுங்கித் தவித்துப்
பொரும வைத்தார்கள்!

பெட்குப் பெண்ணே எதிரி என்ற
பேச்சி ருந்தாலும்
வெட்கங் கெட்ட ஆண்கள் தாமும்
வெதும்பச் செய்கின்றார்!

தானே கறுப்பு, தங்கை கறுப்பு,
தாய்கறுப் பென்றாலும்
தனக்கு வேண்டும் மனைவி மட்டும்
நிறமாய்க் கேட்கின்றார்!

கறுப்புப் பெண்கள் ஆக்கும் சோறு
கசப்பாய் இருக்குமா?
கறுப்புப் பெண்கள் இருக்கும் வீடு
இருட்டாய் இருக்குமா?

கறுப்புப் பெண்கள் சூனியகாரரா?
பால் சுரக்காதா?
கருத்தறிந்து வரவறிந்து
குடும்பம் நடத்தாரா?

நிறத்துப் பெண்டிர் கறுப்பாய்ப் பெற்றால்
எங்கே முகம்வைப்பீர்?
நிறத்துப் பெண்டிர் செருக்காய் இருந்தால்
எங்கே கரம்வைப்பீர்?

கறுப்புப் பெண்கள் கவலை ஏக்கம்
கடவுள் அறிவானோ?
கணவன் வரும்வரை கலங்கும் கலக்கம்
கண்டே அதிர்வானோ?

*கே. இனியவன்*

# நீங்களும் அழகி தான்..!

அழகாக இருக்க வேண்டும் என்று எல்லா பெண்களுக்குமே ஆசை இருக்கும். இயற்கை தந்துள்ள அழகை இன்னும் மெருகூட்டுவது ஆடைகள் தான். அந்த ஆடையை அணிந்து கொள்ளும் விதமே அழகை நிர்ணயிக்கிறது. தங்கள் உடல் அளவுக்கு ஏற்ப, வயதுக்கு ஏற்ப ஆடையை அணிந்து கொண்டால் எந்த பெண்ணும் அழகியாக ஜொலிக்கலாம்.

01. ஒல்லியாகவும், உயரமாகவும் நிறமாகவும் உள்ள பெண்கள் கோடு அல்லது சதுர வடிவிலான பெட்டி போட்ட ஆடைகள் அணிய வேண்டாம். தலைமயிரை கழுத்துக்கு மேல் தூக்கி அலங்காரம் செய்யக் கூடாது. கொஞ்சம் பெரிய பூக்கள் போட்ட பளிச்சென்று மின்னும் சேலைகள் அல்லது சுடிதார்அணிந்தால் நீங்கள் அதற்கு மிகவும் பொருத்தமாக இருப்பீர்கள். நீளமான, அகலமான பிளேன் சோல்டரை பொருத்தமான கலரில் அல்லது வெள்ளை, கருப்பு நிறங்களில் அணிந்து நீங்கள் நடந்து வந்தால் உங்களை இரசிப்பவர்களின் எண்ணிக்கை தவிர்க்க முடியாததாகி விடும். அந்த அளவுக்கு நீங்கள் எடுப்பாகத் தெரிவீர்கள்.

03. ஒல்லியாகவும், உயரமாகவும் உள்ள கருப்பு அல்லது மாநிறமாக உள்ள பெண்கள் மிகவும் கடுங் கலர் ஆடைகளை தேர்வு செய்யக் கூடாது. அப்படியே தேர்ந்தெடுத்தாலும், கடுங்கலர் மற்றும் இளங்கலர்கள் மாறி, மாறி வருவது போல ஆடைகளைத் தெரிவு செய்யலாம். இப்படி ஆடைகளைத் தெரிவு செய்யும் போது, அந்த ஆடையில் உள்ள ஏதாவது ஒரு கலரில், அல்லது ஆடையில் உள்ள இளங்கலரில் சட்டையோ அல்லது சோல்டரோ அணியலாம்.

04. குட்டையாகவும், சிகப்பு கலருமாக இருக்கும் பெண்கள் பிளேன் கலரில் ஆடை அணியக்கூடாது. அதையும் மீறி அணியும்போது, அணிந்திருக்கும் ஆடை புடவையாக இருந்தால் சட்டை மின்னும் வேலைபாடுகள் கொண்டதாகவோ இருக்கலாம்.

05. கருப்பாகவும், குள்ளமாகவு இருப்பவர்கள் மெல்லிய சரிகை கரை வைத்தோ அல்லது மெல்லிய கரையுடன் புடவை அணியலாம். முடிந்தவரை கரையும், தலைப்பும் உள்ள புடவைகளை தவிர்ப்பது நல்லது. ம வும் கடுங்கலர் நிற ஆடைகளை கருப்பு நிறம் கொண்டவர்கள் அணியக் கூடாது. அப்படியே அணி தாலும், அதில் சிறிய இளம் நிறப்பூக்களோ அல்லது புள்ளிகளோ இருக்கும் படியான ஆடைகளை தேர்வு செய்து அணியலாம். இவர்கள், ஒற்றை ஒற்றையாக தனித்தனி வடிவமைப்புகளும், அந்த வடிவமைப்புகளுக்கு நடுவே நிறைய இடைவெளியும் இல்லாமல் இருப்பது போன்ற புட வகளை தேர்வு செய்து அணிந்தால் அம்சமாக இருக்கும்.

06. குண்டாக இருப்பவர்கள், உ லுடன் ஒட்டியவாறு எந்தவொரு ஆடையையும் அணியக் கூடாது. அப்படி அணிந்தால் கோப ரி என்று தான் பகிடி பண்ணுவார்கள்.

07. ஒல்லியாக இருப்பவர்கள் சுரு வைத்த ஆடைகளை அணிந்தால் சிறிது குண்டாக தூக்கிக் காட்டும். இவர்கள் இறுக்கமான அ டைகளைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

08. நீளக்காற்சட்டையும், ரீஷே டும் அணியும் பெண்கள் ரீஷேர்ட்டை வெளியில் விட்டு அணியலாம்.

மொத்தத்தில், என்ன விலை கொ ஆடை அணிகிறோம் என்பது முக்கியமல்ல, கவர்ச்சியான ஆடைகளைத் தேர்வு செய்கிறோ ன்பது தான் முக்கியம். உங்கள் தேர்வு சரியாக இருந்தால், இனி நீங்களும் அழகி தான்...!

-கலை

# பீட்ரூட் வடை



## தேவையான பொருட்கள்:

1. பீட்ரூட் - 1
2. துவரம் பருப்பு - 100 கிராம்
3. கடலைப்பருப்பு - 50 கிராம்
4. மிளகாய் வற்றல் - 5
5. சீரகம் - 1/2 தேக்கரண்டி
6. இஞ்சி - சிறு துண்டு
7. பூண்டு - 4 பல்
8. வெங்காயம் - 1
9. உப்பு - தேவையான அளவு
10 . கருவேப்பிலை
11 .எண்ணெய் - தேவையான அளவு

## *செய்முறை:*

*1.* துவரம் பருப்பு, கடலைப் பருப்பைத் தண்ணீரில் குறைந்தது 1 மணி நேரம் ஊற வைக்கவும்.

*2.* பீட்ரூட்டைத் தோல் சீவி துருவிக் கொள்ளவும்.

*3.* வெங்காயம், கருவேப்பிலையை பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.

*4.* ஊற வைத்த பருப்புடன் மிளகாய், சீரகம், இஞ்சி, பூண்டு, உப்பு சேர்த்து சிறிது கர கரப்பாக அரைக்கவும்.

*5.* அரைத்ததுடன் பீட்ரூட், வெங்காயம், கருவேப்பிலை சேர்த்துப் பிசையவும்.

*6.* பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றிக் காய்ந் ததும், மிதமான நெருப் பில் வைத்துக் கொண்டு பிசைந்த மாவை வடைகளாகத் தட்டிப் போட்டுப் பொரித் தெடுக்கவும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனப் பங்குச் சந்தை வீழ்ச்சி ஆட்சியாளர்களுக்கு சவாலா?

**- வேல் தர்மா**

சீனப் பங்குச் சந்தையின் சூட்டியான ஷாங்காய் கொம்பசிற் சீன அரசின் தீவிர நடவடிக்கைகளையும் மீறி ஜூலை 14 ஆம் 15ஆம் திகதிகளில் சரிவைச் சந்தித்தது. சீனப் பொருளாதாரம் ஏழு விழுக்காடு வளர்ச்சியில் உறுதியாக இருக்கின்றது என்ற செய்தி 15ஆம் திகதி வெளிவந்த வேளையிலும் பங்குச் சந்தையின் வீழ்ச்சியைத் தடுக்க முடியவில்லை.

**வட்டி சுட்டதடா!!!!**

ஏற்றுமதியில் பெரிதும்



தங்கியிருக்கும் சீனப் பொருளாதாரத்தை மாற்றி அமைப்பது சீன அரச முதலாளித்துவவாதிகளின் தலையாய கொள்கையாகவும் முதன்மைப் பணியாகவும் இருக்கின்றது. அதற்கு உள்நாட்டுக் கொள்வனவாளர்களை பொருளாதார ரீதியில் வலுமிக்கவர்களாக மாற்றுவது அவசியமான ஒன்றாகிவிட்டது. 1978ஆம் ஆண்டில் இருந்து சீனா உலகச் சந்தையில் தனது பொருட்களின் போட்டியிடு திறனை அதிகரிக்க உள்ளூர் ஊதியத்தையும் சேமிப்புக்கள் மீதான வட்டி வீதத்தையும் திட்ட மிட்ட முறையில் நசுக்கி வைத்திருந்தது. இதனால் சீன மக்களின் கொள்வனவு வலு அதிகரிக்கவில்லை. குறைந்த வட்டி வீதம் அரசின் உற்பத்தி நிறுவனங்களுக்கு மலிவான வட்டி வீதத்தில் நிதியைக் கொடுத்தது. இதனால் அரச உற்பத்தி நிறுவனங்கள் நாடெங்கும் பாரிய உட்கட்டுமானங்களை உருவாக் கின. கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக சீன ஆட்சியாளர்கள் ஏற்றுமதிப் பொருட்களின் உற்பத்திச் செலவை அதிகரிக்காமல் எப்படி உள்ளூர் மக்களின் கொள்வனவு வலுவை அதிகரிப்பது என் பதில் தங்கள் தலை முடியை பிய்த்துக் கொண்டிருக்கின்றனர். சீன மக்களை கட்டடங்கள் வாங்கச் செய்வதாலும் பங்குச் சந்தையில் முதலீடு செய்யச் செய்வதாலும் அவர்களின் கொள்வனவு வலுவை அதிகரிக்கலாம் எனச் சீன ஆட்சியாளர்கள் திட்டமிட்டுச் செயற்பட்டனர். இதனால் கடந்த இருபதுஆண்டுகளாக சீனாவில் கட்டடங்களின் (அசையாச் சொத்துக்கள்) விலைகள் அதிகரித்துக் கொண்டே போயின. கடந்த ஆண்டில் இருந்து பங்குச் சந்தையிலும் பெரும் விலை அதிகரிப்பு ஏற்பட்டது. கடந்த சில ஆண்டுகளாக உலகப் பொருளாதார நிபுணர்கள் சீனாவின் அசையாச் சொத்து அளவிற்கு மிஞ்சிய விலை அதிகரிப்பைக் கண்டுள்ளது. அவற்றின் விலைகள் திடீர்ப் பெரும் சரிவைச் சந்திக்கலாம், அப்படி நடக்கும் போது சீன அவற்றை வாங்கக்,கடன் கொடுத்த வங்கிகள் பெரும் இழப்பீட்டைச் சந்திக்கும்; அது ஒரு கடன் நெருக்கடிக்கு வழிவகுக்கும் என எச்சரித்துக் கொண்டிருந்தனர்.

**பங்குச் சந்தையின் பங்கு அதிகரிக்கப்பட்டது**

நீண்ட காலமாகச் சீனப் பொருளாதாரத்தில் பங்குச் சந்தையின் பாகம் சிறிய அளவிலேயே இருந்தது. கடந்த ஓராண்டாக பங்குச் சந்தையின் வளர்ச்சி அபரிமிதமாக இருக்கின்றது. சீன வளங்களை திறன் மிக்க வகையில் பகிர்வதற்கு முதலாளித்துவ நாடுகளில் உள்ளது போன்ற ஒரு பங்குச் சந்தை அவசியம் எனச் சீன ஆட்சியாளர்கள் கருதியதனால் அவர்கள் சீனப் பங்குச் சந்தையைத் திட்ட மிட்ட முறையில் வளர்த்தெடுத்தனர். கடன் வாங்கி பங்கு களில் முதலீடு செய்வது அனுமதிக்கப் பட்டது. சீனப் பொருளாதாரத்தில் நிதிச் சேவையின் பங்கு அதிகரித்தது.

**இலட்சோப இலட்சம் தொலைந்தது**

சீனப் பங்குகள் மூன்று ரில்லியன்(மூன்று இலட்சம் கோடி) அமெரிக்க டொலர்கள் பெறுமதியான இழப்பீட்டைச் சந்தித்திருக்கும் வேளையில் சீனாவின் பொருளாதாரம் தொடர்பாக சீன ஆட்சியாளர்கள் மட்டுமல்ல பல வளர்ச்சியடைந்த நாடுகளும் கடும் கரிசனை கொண்டுள்ளனர். சீனாவில் ஏற்பட்ட சொத்திழப்பீடு உலக வரலாற்றில் என்றும் ஏற்படாத சொத்திழப்பு எனக் கருதப்படுகின்றது. சீனப் பொருளாதாரம் மோசமடைந்தால் அது சீன ஆட்சியாளர்களுக்கு ஆபத்தாக முடியும் என்பதைச் சீன ஆட்சியாளர்கள் நன்கறிவர். சீனாவில் நடக்கும் இயற்கை அனர்த்தங்களில் இருந்து தென் சீனக் கடலில் உள்ள முரண்பாடுகள் வரை எந்தப் பிரச்சினைகளிலும் தாம் ஊடகங்களில் தோன்றி மக்களுக்கு ஆறுதலும் உறுதியும் வழங்கிக் கொண்டிருந்த சீன அதிபர் ஜி ஜின்பிங்கும் சீனத் தலைமை அமைச்சர் லீ கேகியாங்கும் சீனப் பங்குகளின் விலை 25 நாட்களில் 32 விழுக்காடு வீழ்ச்சியக் கண்ட போது மௌனமாக இருக்கின்றார்கள். தம் தாய் நாடு எல்லாத் துறையிலும் முன்னேறி உலகின் முதல்தர நாடாக உருவாகப் போகின்றது என நம்பிக் கொண்டிருந்த சீன மத்திய தர வர்க்கத்து மக்களின் நம்பிக்கை தளரத் தொடங்கிவிட்டது. அதிலும் கடன் பட்டு பங்குகளை வாங்கிய மத்திய தர வர்க்கத்து அபிவிருத்தி விரும்பிகள் பெரிதும் பாதிப்படைந் துள்ளனர்.

**நகரவாசிகளின் நரகமான பங்குச் சந்தை**

சீன நகரவாசிகளில் எண்பது வீதத்தினர் பங்குச் சந்தையில் முதலீடு செய்துள்ளனர். அண்மைக் காலங்களாக சீன அரசு மக்களைப் பங்குச் சந்தையில் முதலீடு செய்யுமாறு உக்குவித்து வந்தது. நாட்டின் பொருளாதார வளர்ச்சியைத் தொடர்ந்து பேண நிறுவனங்களில் முதலீடு அதிகம் தேவைப்பட்ட போது அவற்றின் பங்குகளில் முதலீடு செய்யும் படி மக்கள் தூண்டப்பட்டனர். சீன அரச நிறுவங்களின் பங்குகளில் மக்கள் செய்யும் முதலீட்டின் அதிகரிப்பு நாட்டின் பொருளாதாரத்தில் அரசின் பிடியைத் தளர்த்துவதாக சீன அரசு பரப்புரை செய்தது. அதே வேளை ஆட்சியில் பொதுவுடமைக் கட்சியின் முக்கிய புள்ளிகளின் பிடியை மேலும் இறுக்கவும் அது வழிவகுத்தது. சீன நகரவாசிகளில் 80 வீதத்தினர் பங்குச் சந்தையில் முதலீடு செய்த போதிலும் அது சீனாவின் மொத்த மக்கள் தொகையில் 15 வீதத்தினர் மட்டுமே.

**அன்று ஜப்பானில் இன்று சீனாவில்**

2008ஆம் ஆண்டின் பின்னர் அமெரிக்க டொலரில் பார்க்கும் போது சீனாவின் மொத்தத் தேசிய உற்பத்தி இருமடங்காக அதிகரித்துள்ளது. சீனப் பங்குச் சந்தை 2015ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் பின்னர் அடைந்த விலை அதிகரிப்பை மட்டுமே இழந்துள்ளது. சென்ற ஆண்டின் பெறுமதியுடன் பார்க்கும் போது சீன பங்கு 75 வீதம் விலை அதிகரிப்பில் இப்போதும் இருக்கின்றது. கடன் வாங்கி பங்குச் சந்தையில் செய்யப்பட்ட முதலீடுகளால் பங்குகள் பெரும் விலை அதிகரிப்பை 2015 மார்ச் மாதத்தின் பின்னர் பெற்றன. சீனாவில் தற்போது நடப்பது தொண் ணூறுகளில் ஜப்பானில் நடந்ததை ஒத்தது என்கின்றனர் சில பொருளாதார நிபுணர்கள். அப்போது ஜப்பானிய அசை யாச் சொத்துக்களினதும் பங்குகளினதும் விலைகள் தொடர் வீழ்ச்சியைக் கண்டன. இதைத் தொடர்ந்து உலகச் சந்தையில் மூலப் பொருட்களின் விலைகள் வீழ்ச்சி கண்டன. அது உலகப் பொருளாதாரத்திற்கு சாதகமாக அமைந்தது. இதே நிலை இப்போதும் நடக்கலாம் எனவும் நம்பப்படுகின்றது.

**சீன அடி சிலம்படி சரியான இடத்தில் விழவில்லை**

பங்குச் சந்தை விலைச் சரிவை சீன ஆட்சியாளர்கள் தமது மிகத் தீவிர கவனத்தில் எடுத்தார்கள். பல அதிரடி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார்கள். ஜூன் 26ஆம் திகதி ஏழு விழுக்காடு விலை வீழ்ச்சி சீனப் பக்குச் சந்தையில் ஏற்பட்டதைத் தொடர்ந்து ஜூன் 27ஆம் திகதி வட்டி வீதம் குறைக்கப் பட்டது. ஜூன் 29ஆம் திகதி உள்ளூராட்சிச் சபைகள் பங்குச் சந்தையில் முதலீடு செய்வதற்கு எதிரான தடை நீக்கப்பட்டது. ஜூலை முதலாம் திகதி பங்கு வர்த்தகத்திற்கான கட்டணம் குறைக்கப்பட்டது. வங்கிகள் மைய வங்கியில் வைப்பிலிட வேண்டிய இருப்பு விகிதம் குறைக்கப்பட்டது. இவற்றால் நாட்டில் பணப் புழக்கத்தை அதிகரிக்கச் செய்யப்பட்டது. ஜூலை 2ஆம் திகதி வங்கிகள் பங்குச் சந்தையில் முதலீடு செய்பவர்களுக்கு வழங்கும் கடன் தொடர்பான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. சீன அரச நிறுவனங்கள் புதிதாக பங்கு விற்பனை செய்வது இடை நிறுத்தப்பட்டது. ஜூலை 8ஆம் திகதி பெரிய அளவில் பங்குகளை வைத்திருப்போர் பங்குகளைப் பெருமளவில் விற்பது தடை செய்யப்பட்டது. பங்கு சந்தையில் குறுகிய கால விற்றல் (short selling) தடை செய்யப்பட்டு அதை மீறுபவர்கள் கைது செய்யப்படலாம் என மிரட்டல் சீன அரசால் விடுக்கப்பட்டது. short selling என்பது பங்குளை வாங்க முன்னரே விற்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வது. ஆனால் சீன ஆட்சியாளர்கள் சீனப் பங்குகளின் விலை அளவுக்கு மிஞ்சி மிகைப்படுத்தப் பட்டிருந்தன என்பதை உணரவில்லை. சீனப் பங்குகள் அதன் உச்ச விலை நிலையில் ஜூன் 12ஆம் திகதி இருந்த போது சீனப் பங்குகளின் விலை சராசரியாக அவை கொடுக்கும் பங்கிலாபத்திலும் பார்க்க 25 மடங்காக இருந்தன. இந்த அளவிற்கு மிஞ்சிய விலை குறைக்கப் படவேண்டிய ஒன்று அது விழுவதைத் தடுக்கக் கூடாது என மேற்குலக ஊடகங்கள் கருத்து வெளிவிட்டன.சீன நிறுவனங்களின் இலாபம் வீழ்ச்சியடையும் போது அவற்றின் விலைகள் உயர்ந்தமை விரும்பத்தகாத ஒன்று மட்டுமல்ல நடக்கக் கூடாத ஒன்றுமாகும். சீன ஊடகங்கள் சீன அரசு பங்குச் சந்தையின் மீது போர் தொடுத்துள்ளது என்றும் அது ஓர் அணுப் படைக்கலப் போர் என்றும் விமர்சித்தன.

(22 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வார இராசி பலன்

**29.07.2015 –04.08.2015**

**மேஷம்**

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

குடும்ப ஒற்றுமை மேலோங்கும். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். அக்கம் பக்கத்தினரின் பாராட்டு கிடைக்கும். வாகன பயணம் இனிதாக அமையும். புத்திரரின் நற்செயல், புகழ் தேடித் தரும். உடல்நிலை சீராகும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சிப் பாதையில் செல்லும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர்.

**ரிஷபம்**

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

தாய் வழி உறவினர்கள், பாசமுடன் பழகுவர். புத்திரரின் போக்கை மென்மையாக சீர்படுத்துவீர்கள். பணக் கடனில் ஒருபகுதி செலுத்துவீர்கள். மனைவியின் செயல்பாடு பெருமையளிக்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற, புதியவர்களின் உதவி கிடைக்கும். பணியாளர்கள், சுறுசுறுப்பாக செயல்படுவர். பெண்கள், ஆன்மிக விஷயத்தில் ஈடுபடுவர். மாணவர்கள் படிப்புக்கான சூழ்நிலை அமையப் பெறுவர்.

**மிதுனம்**

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

புத்திரர்கள், கல்வியில் சிறந்து விளங்குவர். உடல்நலனில் அக்கறை கொள்வது நல்லது. மனைவியின் செயல்பாடு, மன நிம்மதிக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் மிதமான ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளானாலும், வருமானம் குறையாது. பெண்கள், வீட்டு பாதுகாப்பில் உரிய கவனம் செலுத்துவது நல்லது.

**கடகம்**

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

வாகனத்தில் பராமரிப்பு செலவு செய்ய நேரிடும். பிள்ளைகளின் பிடிவாத குணத்தால், பணம் செலவாகும். விருந்து, விழா என சென்று மகிழ்வீர்கள். மனைவியின் செயல்பாடு, உங்களின் கவுரவத்தை மேம்படுத்தும். தொழில், வியாபாரத்தில் மிதமான ஆதாயம் கிடைக்கும். பணியாளர் எதிர்பார்த்த கடனுதவி வந்து சேரும்.

**சிம்மம்**

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

பிள்ளைகளின் செயல்பாடு, பெருமிதம் அளிக்கும். வழக்கு விவகாரத்தில், சாதகமான தீர்வு கிடைக்கும். மனைவி, குடும்ப நலனில் அக்கறை கொள்வார். விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள். இனிய அணுகுமுறையால், தொழிலில் ஆதாயம் அதிகரிக்கும்.

**கன்னி**

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். எதிரியால் ஏற்பட்ட தொல்லை மறையும். இல்லறத் துணை, கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள், பொறுப்புணர்வுடன் பணிபுரிவர். பெண்களுக்கு, தாய்வீட்டு சீதனம் கிடைக்கும். மாணவர்கள், படிப்பில் கவனம் செலுத்துவர்.

**துலாம்**

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

பிள்ளைகள் உங்களிடம் எதிர்காலம் குறித்து ஆலோசிப்பர். எதிரியாக செயல்பட்டவரும் மறைமுகமாக உதவுவார். இல்லறத் துணை விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். தொழில் வளர்ச்சிக்கான அரசின் உதவி கிடைக்கப் பெறலாம். பணியாளர்கள், புதிய தொழில்நுட்பத்தை கற்றுக் கொள்வர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி குவிப்பர்.

**விருச்சிகம்**

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

உடன் பிறந்தவர்களின் உதவி, ஓரளவே கிடைக்கும். வீடு, வாகன பாதுகாப்பில் உரிய கவனம் செலுத்துவது நல்லது. புத்திரர்கள், தன்னம்பிக்கையுடன் செயல்படுவர். உடல்நலனில் அக்கறை செலுத்துவீர்கள். இல்லறத் துணையின் செயல்பாடு, மன ஆறுதலுக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் மிதமான ஆதாயம் கிடைக்கும். பெண்கள், பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம்.

**தனுசு**

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். பூர்வ சொத்தில் அதிர்ஷ்டவசமாக வருமானம் கிடைக்கும். மனைவி வழி உறவினர்களுடன் இணக்கம் ஏற்படும். தொழில், வியாபார வளர்ச்சி லாபம் உயரும். .பணியாளர்கள், சுதந்திர மனப்பான்மையுடன் செயல்படுவர். பெண்கள், சுபநிகழ்ச்சி நடத்த திட்டமிடுவர். மாணவர்கள், ஆர்வமுடன் படித்து முன்னேறுவர்.

**மகரம்**

**திருவோணம்,அவிட்டம்1,2ஆம்பாதங்கள்**

வாகன பயணம் இனிதாக அமையும். புத்திரரின் செயல்பாடு•பெருமை சேர்க்கும். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் கருத்துக்கு மதிப்பு கொடுப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய நடைமுறையை பின்பற்றி, லாபத்திற்கு வழிவகுப்பீர்கள். பணியாளர்கள், பணிச்சுமையில் இருந்து விடுபட்டு மகிழ்வர். பெண்கள், குடும்ப வளர்ச்சிக்காக பாடுபடுவர்.

**கும்பம்**

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள்**

வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். ஆன்மிக விஷயத்தில் ஆர்வம் கூடும். இல்லறத் துணையின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். பணியாளர்கள், அதிகாரிகளின் கருத்துக்கு மதிப்பளிப்பது நல்லது. பெண்கள், உறவினர்களுடன் வாக்குவாதம் செய்வதை தவிர்க்கவும்.

**மீனம்**

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

புத்திரர், பிடிவாத குணத்துடன் செயல்பட வாய்ப்புண்டு. உடல் நலத்திற்கு ஒவ்வாதவற்றை தவிர்ப்பது நல்லது. இல்லறத் துணையின் கருத்துக்கு மதிப்பு கொடுப்பது நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் தடை நீங்கி, ஆதாயம் படிப்படியாக உயரும். பணியாளர்கள், பணி இலக்கை எளிதில் நிறைவேற்றுவர். பெண்கள், மின் உபகரணங்களை கவனமுடன் கையாளவும்.

# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு **96**



இந்தக் கொடிய நிகழ்வுகள் இடம் பெற்ற போதும், தங்கள் நம்பிக்கைக்குரிய பலம் மிக்க அண்டை நாடு தமது நம்பிக்கையைத் தகர்த்த போதும், தங்கள் அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிப்பதில் இந்தியா ஓர் ஆதரவு நாடாக முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் இன்னமும் எதிர்பார்ப்பது வியப்புக்குரியது.

குறித்த ஆண்டில், அரசியல் இராணுவ நிகழ்வுகள் ஒன்றன் பின் ஒவ்வொன்றாக குவிந்து ஏற்படுத்திய பாதிப்புக்களின் விளைவாக, இந்திய விடுதலைப் போர் நிகழ்ந்தது. தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றிலே பாரதூரமான அவலங்களை ஏற்படுத்தி ஆண்டு, இந்த ஆண்டு. அதுவே 1987!


### சிங்கள இராணுவப் படையெடுப்பு

பிரபாகரன் 1987 ஜனவரியிலே இந்தியக் கரைகளை விட்டு அகன்ற போது, இந்தியாவின் அடாவடித்தன இராஜதந்திரம் தொடர்பாக , கசப்புடனேயே வெளியேறினர். தாம் வெளியேறிய போது இருந்த பகைமை நிலைமையை விட, இனித் தொடரப் போகும் நிலைமை கூடுதலான பேரிடரை விளைவிக்கப் போகின்றது என்பதை அப்போது அவர் ஊகித்திருக்க முடியாது. நாமும் அதை எதிர்பார்க்கவில்லை. ஆயினும் , அரசியல், இராணுவ நிலைவரம் தொடர்ந்து சீரழிந்து செல்ல இந்தியாவோ, சிறீலங்காவோ அனுமதிக்கப் போவதில்லை என எண்ணினோம். அரசியல் இணக்க முயற்சிகள் தோல்வி கண்டிருந்தன. விடுதலைப்புலிகள் தங்கள் இராணுவ ஏற்பாடுகளை தீவிரப்படுத்தியிருந்தார்கள். பிரபாகரனும் தாம் யாழ்ப்பாணம் திரும்பிய பின், போராட்டத்தை எவ்வாறு நடத்த விரும்புகிறார் என்பது பற்றிச் சில இலக்குகளை வைத்திருந்தார். ஆனால், சில அரசியல் முனைப்புகளும் இராணுவ நடவடிக்கைகளும் நிலைமையைச் சீரழிக்கத் தொடங்கியிருந்தன. பிரபாகரன் யாழ்ப்பாணம் சென்றடைந்தவுடன் தெரிவித்த தகவலில், யாழ்ப்பாண தீபகற்பத்தில் முக்கிய இராணுவத் தாக்குதலை நடத்துவதற்கு ஆயத்தமாக சிறீலங்கா இராணுவம் மிகப் பெரிய படை நகர்வில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாக அறிவித்தார். சிறீலங்காப் படைகளின் பழிவாங்கும் இராணுவ நடவடிக்கைகள் மக்கள் அடர்த்தியாக வாழும் யாழ்ப்பாண தீபகற்பத்தில் மேற்கொள்ளப்படும் போது, பெருந்தொகையான பொதுமக்கள் நேரடியாகப் பாதிக்கப்படப் போகிறார்களோ என்று பெருங்கவலை அடைந்தோம். இராணுவத் தாக்குதல் திட்டத்தோடு, சிங்கள அரசு, வடக்கின் மீது ஈவிரக்கமற்ற பொருளாதாரத் தடையை சுமத்தியது. மக்கள் மீது இது சொல்லொண துயரப் பளுவை ஏற்றியது. சிறிலங்கா அரசு விடுதலைப்புலிகளுடன் நடத்திய போரில், இஸ்ரேலியரின் கிளர்ச்சி முறியடிப்பு நுட்பத்தைத் தருவித்துப் பயன்படுத்தியது. கெரில்லாப் படையினருக்கும், பொதுமக்களுக்கும் இடையே ஒரு பிளவை ஏற்படுத்தி, இயக்கம் பெற்றிருந்த மக்கள் ஆதரவைத் துண்டிப்பதே, அவர்களுடைய கிளர்ச்சி முறியடிப்பு முயற்சியின் குறியாக அமைந்தது. இஸ்ரேலியர் வழங்கிய அறிவுரைப் படி கெரில்லாப் படைத் தாக்குதல் நடக்கும் போதும், அரச எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போதும்,மக்களைக் கூட்டாக தண்டிக்கும் நடைமுறையை சிறிலங்கா அரசு ஆண்டாண்டாகத் கடைப்பிடித்து வந்தது.

**(பதிவு தொடரும்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அறிவியலாளர்களின் எச்சரிக்கையைக் கணக்கில் கொண்டு, உலகின் மிகச் சிறந்த குடிமக்கள் (eminent citizens) அனைவரும், அரசியல்வாதிகளை உடனடியாக எதிர் நடவடிக்கைகள் எடுத்து, புவியை அழிவுப் பாதையில் இருந்து திருப்பும்படி கோருகின்றனர். சாதாரணமான பாமர மக்களும் அவ்வாறே கோருகின்றனர். ஆனால் பெரும் பான்மை மக்களின் விருப்பப்படியே ஆட்சி செய்து கொண்டு இருக்கிறோம்' என்று சத்தியம் செய்யும் முதலாளித்துவ அரசியல்வாதிகளும், முதலாளிகளும், முதலாளித்துவ அறிஞர்களும் யாருடைய கோரிக்கையையும் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது மட்டும் அல்ல; அதைப் பற்றி விவாதம் செய்யவே மறுக்கின்றனர்.**




# உளநோயின் உச்ச கட்டத்தில் முதலாளித்துவம்

- இராமியா (மக்கள் நெஞ்சம் )

வெப்ப உயர்வும், சுற்றுச் சூழல் கேடும் நாம் வாழும் பூமியில் உயிரினங்கள் அனைத்தையும் அழித்து விடும் என்று அறிவியலாளர்கள் இந்தப் புவியில் நிகழும் மாற்றங்களை ஆராய்ந்து, தெரிவித்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்தச் சீரழிவைத் தடுத்து நிறுத்த, கரி வளி (carbon di oxide) உமிழ்வையும், பசுமை வீட்டு வளி (green house gas) உமிழ்வையும் வெகுவாகக் குறைக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். ஏற்கனவே நிகழ்ந்து விட்ட கேடுகளில் இருந்து மீள, மரம் வளர்த்தலையும் விவசாயத்தையும் மிகப் பெரும் அளவில் முன்னெடுக்க வேண்டும் என்றும் கூறுகிறார்கள்.

அறிவிலாளர்களின் அறைகூவலை, முதலாளிகள் காது கொடுத்துக் கேட்கவே மறுக்கின்றனர். என்ன இருந்தாலும் அறிவியலாளர்கள் தங்களுக்குக் கீழ் பணி புரியும் ஊழியர்கள் தானே என்ற நினைப்பில் அலட்சியமாகவும், எங்களுக்குக் கீழ் பணிபுரிபவர்கள் எங்களுக்கு அறிவுரை சொல்வதா என்ற அதிகார மயக்கத்திலும், இந்தப் பூவுலகை அழிவுப் பாதையில் மேலும் மேலும் விரைவாக இட்டுச் செல்கின்றனர்.

அறிவியலாளர்களின் எச்சரிக்கையைக் கணக்கில் கொண்டு, உலகின் மிகச் சிறந்த குடிமக்கள் (eminent citizens) அனைவரும், அரசியல்வாதிகளை உடனடியாக எதிர் நடவடிக்கைகள் எடுத்து, புவியை அழிவுப் பாதையில் இருந்து திருப்பும்படி கோருகின்றனர். சாதாரணமான பாமர மக்களும் அவ்வாறே கோருகின்றனர். ஆனால் பெரும்பான்மை மக்களின் விருப்பப்படியே ஆட்சி செய்து கொண்டு இருக்கிறோம்' என்று சத்தியம் செய்யும் முதலாளித்துவ அரசியல்வாதிகளும், முதலாளிகளும், முதலாளித்துவ




அறிஞர்களும் யாருடைய கோரிக்கையையும் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது மட்டும் அல்ல; அதைப் பற்றி விவாதம் செய்யவே மறுக்கின்றனர்.

இந்த நிலையில், உலகில் வாழும் 120 கோடி மக்கள் பின்பற்றும் கத்தோலிக்கக் கிறிஸ்தவ மதத்தின் தலைவரான போப் ஆண்டவர் 18.6.2015 அன்று, அரசியல்வாதிகள், முதலாளிகள், முதலாளித்துவ அறிஞர்கள் இந்தப்பிரச்சினையில் காட்டும் அலட்சியப் போக்கைக் கடுமையாகச் சாடி உள்ளார்.

மனித குலம் இழைத்துள்ள பொறுப்பற்ற இந்தக்கேடுகளுக்காக, நம் பூமித் தாய் உரக்க அழுது கொண்டு இருப்பதாகவும், இந்தப்புவியில் உள்ள வளங்கள் யாவும் தலைமுறை தலைமுறையாக அனைத்து உயிரினங்களும் மகிழ்ச்சியுடன் துய்ப்பதற்கு என்றே கடவுள் அருளி உள்ள வரம் என்றும், அவற்றை மாசு படுத்திப் பயனற்றதாக்கும் உரிமை யாருக்கும் இல்லை என்றும், சுற்றுச் சூழல் கேட்டுக்கும் மக்களிடையே உள்ள ஏற்றத் தாழ்வுக்கும் நெருக்கமான, பிரிக்க முடியாத தொடர்பு இருப்பதாகவும், இந்தக் கேடுகளுகளை இனியும் தொடர அனுமதிக்கக் கூடாது என்றும் போப் ஆண்டவர் கூறி உள்ளார். புவியை இக்கேடான நிலைக்கு இட்டுச் சென்றுள்ள பணக்கார நாடுகள் இதற்குப் பொறுப்பேற்று, அதை அழிவுப் பாதையில் இருந்து மீட்கும் பணியை உடனடியாகத் தொடங்க வேண்டும் என்றும் அவர் கூறி உள்ளார்.

அறியலாளர்கள், சிறந்த குடிமக்கள், பாமர மக்கள் என்று யார் சொல்வதையும் கேட்க மறுக் கும் முதலாளித்துவ அரசியல்வாதி கள், போப் ஆண்டவருக்கும் எதிர்மறை விடையையே அளித்து உள்ளனர். அந்த விடையும் தர்க்க நியாயங்களுக்குக் கட்டுப்படாத முரட்டுத்தனமான விடையாகவே இருக்கிறது.

அமெரிக்க நாட்டில் எதிர் வருகின்ற அதிபர் தேர்தலில், குடியரசுக் கட்சியின் சார்பில் போட்டியிடும் ஜெப் புஷ் (Jeb Bush) தங்கள் நாட்டின்

(22ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# பாசம்

ஆ. முல்லைத்திவ்யன்



கடல் அலையின் சத்தம் தூரத்தே கேட்க, அந்த மணல் ஒழுங்கையால் நடந்து சென்று கொண்டிருக்கிறேன். முன்பு பழகிய பாதையோரத்தின் இரு மருங்கும் புற்கள் வளர்ந்திருக்கின்றன. தெரு நாய்கள் அங்கும் இங்கும் ஓடித் திரிகின்றன. புலுனிக் குருவிகள் தத்தித் தத்தி பறக்கின்றன. முன்பு நுங்கு நிறைந்திருந்த பனை மரத்தில் இப்போ கொட்டுக் காகம் ஒன்று எட்டிப் பார்க்கிறது. கனகம் மா ஆச்சியையும் , நண்பன் ஈழமாறனை யும் நினைத்துக் கொண்டு நடப்பதாலோ என்னவோ மணலின் சூடு தெரிய வில்லை.

வேலியோர முருங்கை மரத்தில் முருங்கைக்காய் பறித்து கொண்டிருந்தா கனகம்மா ஆச்சி. "என்ன இயல்வா ணன் இந்தப் பக்கம்..." நான் இப்ப வேலை விடுமுறையில வந்திருக்கிறேன் உங்களையும் பாத்திட்டு ஈழமாறன் விசயமாகவும் கதைச்சிட்டுப் போகலாம் எண்டு தான் வந்தனான். "ஏன் தம்பி வெளியில நிற்கிறாய். படலையைத் திறந்து கொண்டு உள்ளுக்கு வா!"

கையில் வைத்திருந்த கொக்கைத் தடியையும் பறித்து வைத்திருந்த முருங்கைக்காயையும் திண்ணையோரம் வைத்தாள் கனகம்மா ஆச்சி. " இந்த திண்ணேல இருடா இயல்வாணன். பத்து பதினைஞ்சு சூடைக்கருவாடு கிடக்கு ஒருக்கா வெயில்லை போட்டுட்டு வாறன்"

"கனகம்மா ஆச்சி பாவம்" முந்தி நாங்கள் கனகம்மா ஆச்சி வீட்டுக்குப் பக்கத்தில தான் இருந்தனாங்கள். இப் போ கனகம்மா ஆச்சி நல்ல மெலிஞ்சு போ னா, கன்னம் குழி விழுந்து போச்சு, முதுகு கூனி அவவின்ர , வயசக் காட்டுது. ஆளும் தனிச்சுப் போனா. இந்த வயசிலையும் இந்த மனுசி இப்படி கஸ்ரப்பட்டு தன் கையை அடிச்சு சீவிக்குதே! " என்ன இயல்வாணன் இப்ப எங்க வேலை" "அம்மா அப்பா எப்படி?" "யாழ்ப்பா ணத் தில தான் வேலை" அம்மா அப்பா செல்வ புரத்தில தான். எப்படி கனகம்மா ஆச்சி இருக்கிறீங்கள்? இருக்கிறன் தம்பி. கனகம்மா ஆச்சியின் பதில் அவவுடைய தனிமையையும் ஏக்கத் தையும் காட்டிட்டு.

"ஈழமாறன் பற்றி ஏதாவது தகவல் கிடைத்ததோ?" "எத்தனையோ பேரிட்ட விசாரிச்சாச்சு ஒரு பதிலும் கிடைக்கேல்ல...." தூரத்தில் வானத் தில் கொடிமின்னல் கீற்றுக்கள் என்னைப் பார்த்ததும் நிச்சயமாக கனகம்மா ஆச்சி க்கு ஈழமாறனின் ஞாபகம், இந்த வானத்தைப் போல இருளும் இடியும் மின்ன லுமாக.... அவளைக் கண்ணீர் மழை பெய்ய வைத்து விட்டது. பெற்ற பிள்ளை, ஒரே பிள்ளை என்ன ஆனான் என்பது புரியாமல் ... எப்படி ...! நிம்மதி வர முடியும். கண்ணைத் துடைத்துக் கொண்டு, "இரு இயல்வாணன் மழை வரப்போகுது போல.... அந்த கருவாட்டை ஒருக்கா உள்ளுக்கு எடுத் துப் போட்டுட்டு வாறன்" குரலில் ஒரு கரகரப்பு தெரிந்தது.

ஈழமாறன் படிக்கிற காலத்திலை என்னோட ஒண்டாப் படிச்சவன். பள்ளிக் கூடம் போகேக்க தன்ரை சைக்கிள்ல என்னை ஏத்திற்றுப் போவான். இப்ப கூட நிறைய நண்பர்கள் இருந்தாலும் அவனை மாதிரி ஒரு நண்பனை வாழ்க்கையில இனி சந்திச்சிருப்பனோ தெரியேல்லை. அவ்வளவு நெருக்கம் நாங்கள் இரண்டு பேரும் - பள்ளிக்கூடத்துக்கு சாப்பாடு கொண்டந்தால் எனக்கு அரைவாசி சாப் பாடு தந்திட்டுத்தான் அவன் சாப்பிடுவான்.

மெல்லிய தோற்றம் தான். கண்ணின் புருவங்கள் இரண்டும் சேர்ந்திருக்கும் அவனுக்கு. கதைக்கிற போதும் சிரிக்கிற போதும் இரு உதடுகளும் மூடியபடி மெல்லியதாக புன்னகைப்பான். "சத்தியம் ஒரு போதும் தோற்பதில்லை" என்பது அவனது முழுமையான நம்பிக்கை. "அடிமைத்தனத்தையும் ஊழலையும் ஒழிக்க வேண்டும் என்பதில் அவன் எங்களை விடத் தீவிரம். அவன் வாசிக்கும் புத்தகங்களும் அப்படித்தான். கூடுதலாக ரஷ்ய நாவல்களான உண்மை மனிதன், தாய், மூன்று தலைமுறை, உயிர்ப்பு ... இப்படி நீண்டு செல்லும். சோவியத் யூனியன் என்ற ஒரு நாடு இப்போது இல்லையாயினும் அவனுக்கு அந்த சமுதாய புத்தாக்கம் பிடித்திருந்தது. அந்த புரட்சி சமுதாயத்தின் துணி கரம் பிடித்திருந்தது. எங்களையும் அவற் றைப் படிக்கும் படி தூண்டு வான்... படிப்பு முடிந்து சில மாதங்கள் தான் நாங்கள் இரண்டு பேரும் ஒன்றாகக் சுத்தினோம். திடீரென்று ஒரு நாள் என்னிடம் கூட சொல்லவில்லை. மயமாக மறைந்து விட்டான். எனக்கு ஒருகை இல்லாதது போன்ற உணர் வு. பிறகு ஒரு நாள் , நன்றாக ஞாபகம் இருக்கு அன்று என்ர பதினெட்டாவது பிறந்தநாள். எதிர்பாராத விதமாக திடீரென்று என் முன் தோன்றினான்.

அந்த பச்சை நிற உடுப்போடு தான் வந்தான். ஆயுதம் எதுவும் கொண்டு வரவில்லை... "இனிய பிறந்தநாள் நல் வாழ்த்துக்கள் இயல்வாணன்!" என்று கட்டி அணைத்து ... சேகுவேரா வின் வாழ்க்கை வரலாறு என்ற புத்தகத்தையும் ஒரு கடிகாரத்தையும் எனக்கு பரிசாக அளித்துவிட்டுச்சென்று விட்டான். அதற்குப் பிறகு இது வரைக் கும் நான் அவனைக் காணவில் லை. அவனோடு பழகிய எல்லா நாள்களுமே இனிய நாள்கள். அந்த ஞாபகங்கள் தான் இன்றைக்கும் என் மனதுக்கு பிடித்தனமாக... அழியாத கோல மாக...

மழை மெல்ல மெல்ல பெய்யத் தொடங்குகின்றது. காற்று பலமாக வீசுகின்றது. இரண்டு காகங்கள் மின்கம்ப வயறில் இருந்தவாறு இறக்கைகளை அடித்து காய வைக்கின்றன. நீண்ட நாள்களின் பின் ஊரின் மண் வாசத்தை நுகருகின்ற வாய்ப்பு எண்டாலும் முந்தி மழை பெய்கின்ற போது இருக்கின்ற மண் வாசம் இப்போது இல்லை.

மழைத்துளிகளில் நனைந்திருந்த சேலையுடனும் மரவள்ளிக் கிழங்கு அவியலுடன் குடிசைக்குள் இருந்து கனகம்மா ஆச்சி வந்தாள். " தம்பி இயல்வாணன் இதைச் சாப்பிடு" என்ர பிள்ளைக்கு இந்த மரவள்ளிக் கிழங்கு அவியல் மிச்சம் பிடிக்கும். ஆச்சி அதைச் சொல்கின்ற போது கண்ணீர் கசிகிறது. அவிய லைத் தாங்கி வைத்திருக்கும் அவளின் கைவிரல்கள் பதறுகின்றன. கிழங் குச் சட்டியை என் முன்னே வைத்து விட்டு மறுபக்கம் திரும்பிக் கொள்கிறாள். உனக்கு தெரியும் தானே தம்பி அவன் கடைசி மட்டும் இவைய ளோட தான் நிண்டவன். கடைசியாக இடம் பெயர்ந்து வரேக்க , என்ரை பிள் ளை தான் தம்பி என்னைப் பாதுகாப் பா... இந்தச் செல்லடிக்கே எனக்கு எந்தக் காயமும் வராமல் பங்கர் வழியில இருத்தி, இருத்தி கூட்டிக் கொண்டு வந்தவன். கடைசியிலே என்னை இராணுவத்தின்ரை பக்கத்துக்கு அனுப்பீட்டு, அவன் எங்கே போனான் என்று தான் தெரியேல்லை... என்ன நடந்தது எண்டு ஒண்டுமே புரியேல்லை'

மனுசி கவலைப்படுகின்ற பொழுது, நான் அழுதிடுவேனோ என்றிருந்தது. பேச்சை மாற்றலாம் என்றாலும் முடியேல்லை. அவன் இப்போ உயிரோடு இருக்கிறானா..? இல்லை இறந்துட்டானா...? இல்லை பிடிபட்டு சித்திரவதை அனுபவிக்கிறானா..? எதுவுமே தெரியாமல்....! எண்ணும் போதே தலை விறைக்கிறது... தள்ளாடும் வயதில் கனகம் மா ஆச்சி என்ன செய்வாள்...! நீண்ட காலத்துக் குப் பிறகு தான் கனகம்மா ஆச்சிக்கு பிள்ளைப் பாக்கியம் கிடைத்ததாக நான் அறிந்திருக் கிறேன். அதனா ல்த் தான் ஈழமாறனுக்கு வயசான தாயாராக அவள் இருந்தாள். தவமிருந்து பெற்ற பிள்ளையை தலை மேல் தாங்கி... இப்ப தனி மரமா... நினைக்கவே நெஞ்சைப் பிசையுது.

அவளே மீண்டும் பேச்சை ஆரம்பித்தாள். " இப்ப நான் இருக்கிற இந்தக் காணி வளவை ஈழமாறனுக்கு எழுதி வைச்சிட்டுத்தான் தம்பி நான் சாகவேணும். இன்னும் கொஞ்ச நாளைக்குத் தானே என்ரை வாழ்க்கை. என் ரை பிள்ளை எங்க இருந்தாலும் எனக்கு கொள்ளி வைக்கிறதுக்கு வரவேணும் தம்பி. நான் அனா தைப் பிணமாய்ப் போகக் கூ டாது. என்ரை பிள்ளையைவாழ வைச்சு நான்பாக் கேல் லை. என்ரை கடைசிப் பயணத்திலாவது என்ரை பிள்ளையை கடவுள் என்னட்டை தரவேணும்அதுதான் இப்ப எந்த நேரமும் என்ரை பிரார்த்தனை. எத்தனை கன வுகளோடவளர்த்த ஒத்தை மகன், இப்ப எங்கே... கே.. கே..!

மழை கொஞ்சம் ஓய்ந்திருந்தது. "தம்பி உலை வைச்சிட்டான் கருவாட்டு குழம்பும் வைக்கப் போறன். சாப்பிட்டு விட்டுப் போவன். "இல் லை கனகம்மா ஆச்சி. பின்னிரண்டு முப்பதுக்கு முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பஸ் இருக்கு நான் போயிற்று வாறன்.

படலைக்கு வந்து என்னை வழியனுப்பினாள் கனகம்மா ஆச்சி. படலையில் காகம் குழைந்து குழைந்து கத்துகிறது. யார் வரவுக்கோ...? அல்லது யார் போறதுக் கோ...? காகம் கரைகிறது என்று எண்ணியவாறு நடையில் வேகத்தைக் கூட்டினேன் முல்லைத்தீவு பஸ்ஸைப் பிடிப்பதுக்காக. சில வருடங்கள் உருண்டோடின. ஒரு நாள் பத்திரிகையைப் புரட்டுகிறேன். மரண அறிவத்தல் கனகம்மா ஆச்சியினுடையது. மனதில கவலை ஆனாலும், ஒரு சந்தோசம் மரண அறிவித்தல் கனகம்மா ஆச்சியினுடையது. மனதில கவலை ஆனாலும், ஒரு சந்தோசம் மரண அறிவித்தலுக்கு உரிமை கோரியிருந்தான் ஈழமாறன். நான் இரண்டு நாள் விடுப்பில் கனகம்மா ஆச்சியின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொள்கிறேன்.... அங்கே ஊர்வலத்தில், இரண்டு பொலிஸ்காரர் இடையே ஈழமாறன் கொள்ளிக் குடத்துடன், அவனால் என்னுடன் பேச முடியவில்லை. என்னைப் பார்த்து தலையசைத்தான். உற்றார் உறவினர்கள் சூழ்ந்திருக்க மகன் தன் அன்புத்தாயின் பூதவுடலுக்கு தீ மூட்டினான். நான் அனாதைப் பிணமாகப் போகக் கூடாது என்ற கனகம்மா ஆச்சியின் வேண்டுதல் பலித்தது. எனக்குள் ஒரு நிம்மதியைத் தந்தது. பிறகு, நீண்ட நாள்களின் பின் ஈழமாறன் எனக்கு ஒரு மடலும் அனுப்பியிருந்தான். அம்மான்ரை இறுதி ஊர்வலத்தில உன்னைப் பார்த்தது சந்தோசம். போன கிழமை தான் செஞ்சிலுவைச் சங்கத்திடம் எங்க காணிவள்வு உறுதியையும் ஐயாயிரம் ரூபா காசும் அனுப்பியிருந்தா. கடைசிக் காலத்தில அம்மாவை பார்க்க முடியேல்லை. அது தான் என்னால ஜீரணிக்க முடியேல்லை... ஆனாலும் அம்மான்ரை ஆசை ஒன்று நிறைவேறியது விட்டது. கொள்ளி வைக்க வாவது கொடுப்பினை இருந்திச்சே...! சரி, ஊர் எப்பிடி இருக்கு? எங்கட பள்ளிக்கூடம் இயங்கத் தொடங்கீட்டுதா ? இரண்டு மாதத்தில புனர்வாழ்வு முடிஞ்சிடும் நான் வந்திடுவன். என்ர ஏ.எல்.றிசல்ட் பள்ளிக் கூடத் தில இருக்கு. ஏதாவது வேலையி ருந்தா, எனக்கான விண்ணப்பப் படிவம் எடுத் தவை.

முதல்ல ஒரு வேலை முக்கியம்.. அதுக்கடுத்ததா , அடுத்து என்ன செய்யலாம் என்றதை அங்க வந்து யோசிப்போம்... ஏதாவது செய்ய வேணும்... எங்கட சமுதாயத் தின்ரை நன்மைக்கு ... அது தான் மனசுல ஓடிக் கொண்டிருக்கு... நிச்சயமாக சந்திப்போம்.

தாய்க்கும் தாய் மண்ணுக்கும் வித்தியாசம் இருக்கா என்ன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொசுத் தொல்லையில் இருந்து தப்பு வேண்டுமா?



மழைக்காலத்தில் வீட்டைச் சுற்றி நீர் தேங்கியிருப்பதால், வீட்டில் கொசுக்களானது அழையா விருந்தாளியாக வந்து தொந்தரவு கொடுத்துக் கொண்டிருக்கும். ஏனெனில் கொசுக்களானது நீர் தேங்கும் பகுதியில் தான் உற்பத்தியாகின்றது. எனவே வீட்டில் கொசுக்களின் தொல்லையில் இருந்து விடுதலை பெற, அவற்றிற்குப் பிடிக்காத வாசனை கொண்ட பொருட்களை அவை நுழையும் இடத்தில் வைத்தால், கொசுக்கள் வீட்டினுள் நுழைவதைத் தடுக்கலாம்.

இங்கு கொசுக்களை அழிக்கும் மற்றும் கொசுக்கள் வராமல் தடுக்கும் சில இயற்கை யான பொருட்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை வீட்டில் பயன்படுத்தினால், வீடு கமகமவென்று மணப்பதுடன், கொசுக்களின்றி சுத்தமாகவும் இருக்கும். சரி, இப்போது கொசுத் தொல்லையில் இருந்து விடுதலை தரும் பொருட்களைப் பார்ப்போமா?

**எலுமிச்சை மற்றும் கிராம்பு**

எலுமிச்சையை பாதியாக வெட்டி, அதன் மேல் கிராம்பை சொருகி, கொசுக்கள் நுழையும் இடத்தில் வைத்தால், அதன் வாசனையினால் கொசுக்கள் வருவதைத் தடுக்கலாம்.

**லாவெண்டர் (lavender)எண்ணெய்**

நறுமணமிக்க லாவெண்டர் எண்ணெயை ஒரு துணியில் நனைத்து, கொசுக்கள் வரும் இடத்தில் தொங்கவிட்டால், கொசுக்களுக்கு அதன் நறுமணமானது பிடிக்காததால், வீட்டில் கொசுக்களின் தொல்லையில் இருந்து விடுதலை கிடைக்கும். இல்லாவிட்டால், லாவெண்டர் எண்ணெயை சருமத்தில் தடவிக் கொண்டாலும், கொசுக்கடியில் இருந்து தப்பிக்கலாம்.

**யூகலிப்டஸ் எண்ணெய்**

யூகலிப்டஸ் எண்ணெய்யை சருமத்தில் தடவிக் கொண்டாலும் கொசுக்கடியில் இருந்து விடுதலைக் கிடைக்கும்.

**வேப்ப எண்ணெய்**

வேப்ப எண்ணெயும் கொசுக்களை அண்ட விடாமல் தடுக்கும். ஏனெனில் இதில் நிறைந்துள்ள இரசாயனம் கொசுக்களுக்கு அழிவை ஏற்படுத்தும். ஆகவே இதனை சருமத்தில் தடவிக் கொள்வதும் நல்ல பலனைக் கொடுக்கும்.



**கோப்பித் தூள்**

கோப்பித் தூளின் நறுமணமும் கொசுக்களுக்கு பிடிக்காது. ஆகவே நீங்கள் உட்காரும் இடத்தின் அருகில் ஒரு பாத்திரத்தில் கோப்பித் தூளை வைத்துக் கொண்டு உட்காருங்கள். பின் பாருங்கள் கொசுக்கள் உங்களை நெருங்கவே நெருங்காது.

**சூடம்/கற்பூரம்**

ஒரு பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி, அதில் சில துண்டுகள் கற்பூரத்தைப் போட்டு, கொசுக்கள் நுழையும் இடத்தில் வைத்தாலும், கொசுக்கள் வருவதைத் தடுக்கலாம்.

# சீனப்பங்குச் சந்தையின்...

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

Pricedtoearnings ratio உயர்வாக இருக்கும் போது பங்கு விலை மோசமாக உயர்ந்திருக்கின்றது எனச் சொல்லலாம்.

**H-பங்குகளும் A-பங்குகளும்**

சீனாவின் ஷாங்காய் பங்குச் சந்தையிலும் ஷென்ஷென் பங்குச் சந்தையிலும் குறித்த சீனாவின் A-பங்குகள் விற்பனையும் கொள்வனவும் நடக்கும். இவற்றில் வெளிநாட்டவர்கள் பங்கு பற்றுவது மட்டுப் படுத்தப்பட்டுள்ளது. ஹொங்ஹொங் பங்குச் சந்தையில் H-பங்குகள் விற்பனையும் கொள்வனவும் நடக்கும். அங்கு வெளிநாட்டினர் சாதாரணமாகப் பங்கு பற்றலாம். A-பங்குகள் மட்டும்தான் 2015 ஆம் ஆண்டு ஜூன் வரை கன்னாபின்னா என விலை அதிகரிப்புக் கண்டு பின்னர் கடும் சரிவைக் கண்டது. H-பங்குகள் பெரும் ஏற்ற இறக்கத்தை அனுபவிக்கவில்லை. சீனாவின் A-பங்குகளில் வெளிநாட்டு பெருமுதலீட்டாளர்களின் பாதிப்பு மிகக் குறைவு.

**அமெரிக்காவிடமிருந்து அடித்த கொப்பி**

1990களில் அமெரிக்காவில் பங்குச் சந்தையில் விலைகள் சடுதியான சரிவைதைத் தடுக்க என ஒரு இரகசிய நடவடிக்கைக் குழு அமைக்கப்பட்டது. 2008ஆம் ஆண்டு ஜனவரியில் அமெரிக்கப் பங்கு விலைகள் சரிந்த போது அமெரிக்காவில் வட்டி வீதம் குறைக்கப்பட்டது. அமெரிக்கா செய்ததை சீனாவும் செய்ய முயல்கின்றது எனச் சொல்லப்படுகின்றது. ஆனால் அமெரிக்கா தலையிட்டது சரியான விலை நிலையிலும் பார்க்க பங்கு விலைகள் குறையாமல் இருப்பதற்கு. கடந்த ஐந்து ஆண்டுகளாக அமெரிக்கா நாட்டில் பணப்புழக்கத்தை அதிகரிக்க எடுக்கும் நடவடிக்கைகள் பங்கு விலைகளை அதிகரிக்க வைக்கின்றன. ஆனால் நாட்டின் பங்கு விலை அளவுக்கு அதிகமாக இருக்கும் போது அதன் வீழ்ச்சியைத் தடுக்க அரசு செய்யும் செலவு விழலுக்கு இறைத்த நீராகும். அமெரிக்க அரசு தாம் பங்குச் சந்தையில் நேரடித் தலையீடு செய்வதில்லை என்கின்றது. பங்குச் சந்தையின் முக்கிய அம்சம் நிறுவனங்கள் மலிவாகவும் பொது மக்களிடமிருந்து நேரடியாகவும் நிதியை பெறுவதும் பொதுமக்கள் சேமிப்பு கணக்கிலும் பார்க்க சிறந்த பங்கிலாபத்தைப் பெறுவதுமாகும். சீனாவின் அரச நிறுவங்கள் தொடர்ந்து பொதுமக்களிடமிருந்து முதலீட்டைப் பெற பங்குச் சந்தை மீது அவர்களுக்கு நம்பிக்கை அவசியம். இந்த ஆண்டு சீன நிறுவனங்கள் 72 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்குச் சமானமான நிதியை பொதுமக்களிடமிருந்து திரட்ட ஏதுவாக அமைந்தது அப்படிப்பட்ட நம்பிக்கையே. எல்லா முதலாளித்துவ அரசுகளும் பங்குச் சந்தை விலை வீழ்ச்சியடையும் போது தலையிடுவதுண்டு. ஆனால் சீனாவின் தலையீடு அதிக நேரடியானதாகவும் தீவிரமானதாகவும் இருக்கின்றது. எந்த ஒரு பொதுவுடமைவாதியும் சீன அரசு உழைக்கும் வர்க்கத்தினருக்குப் போக வேண்டிய நிதி வளத்தை பங்குச் சந்தையில் கொள்ளை இலாபமீட்டுபவர்களைப் பாதுகாக்கப் பயன்படுத்துகின்றது என வாதிட முடியும். சீனாவின் உயர் பணக்காரர்கள் 400 பேர் 100பில்லியன் டொலர்களை இழந்தது நாட்டின் இழப்பீடா என அவர்களால் கேள்வி எழுப்ப முடியும். சீனப் பொதுவுடைமைக் கட்சியின் உயர் பீடத்தினரும் பெரும் இழப்பீட்டைச் சந்தித்திருக்க வேண்டும்.

**சீனாவால் திட்டமிட்டுத் தப்ப முடியும்**

சீனச் சிறு முதலீட்டாளர்களுக்கு பங்குச் சந்தை அனுபவம் மிகக் குறைவு. ஜூலை மாதம் அவர்களுக்கு ஏற்பட்ட இழப்பு அவர்களுக்கும் மேலும் பல புதிதாக வரவிருக்கும் முதலீட்டாளர்களுக்கும் நல்ல படிப்பினை. இந்தப் படிப்பினை சீனாவின் முதலீட்டுத் துறைக்கு உதவியாகவும் வள ஒதுக்கீட்டில் சீன அரசு சிறப்பாகச் செயற்படவும் உதவும். முதலீட்டாளர்கள் நாட்டுப்பற்றுடன் செயற்படுவதில்லை என்பதை சீன அரசு உணர்ந்து கொள்ள வேண்டும். சீனப் பொருளாதாரம் தற்போது ஏழு வீதம் வளர்கின்றது இது 2009ஆம் ஆண்டிற்கான வளர்ச்சியான 12 வீதத்துடன் ஒப்பிடுகையில் குறைவானதாகும். ஆனால் 2007ஆம் ஆண்டு சீனாவின் மொத்தத் தேசிய உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் தற்போது ஏற்படும் அதிகரிப்பு இருமடங்காகும். வளர்ச்சி அதிகரிக்கின்றது. ஆனால் கடந்த ஆண்டின் வளர்ச்சியுடன் இந்த ஆண்டின் வளர்ச்சிக்கும் இடையிலான வளர்ச்சி அதிகரிப்பு விழுக்காடு மட்டுமே குறைகின்றது. இருந்தும் ஏழு விழுக்காடு வளர்ச்சியே சீன ஆட்சியாளரின் இலக்காகும். பங்குச் சந்தை வேறு பொருளாதாரம் வேறு என்பதை சீனா நிரூபிக்கும். ஆனால் சீனாவின் நாணயத்தை உலக நாணயமாக்குவதற்கு ஒரு அரச தலையீடு குறைந்த பங்குச் சந்தை அவசியம்.

# உளநோயின் உச்ச...

(20ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதாரக் கொள்கைகளைத் தீர்மானிப்பதில் மதத் தலைவர்கள் தலையிட முடியாது என்று கூறி உள்ளார். அதாவது உழைக்கும் மக்களை விடுதலை உணர்வு பெறாமல் மயக்கத்தில் வைத்துக் கொள்வது தான் மதவாதிகளின் வேலை; சுரண்டல்வாதிகளுக்கு நல்லறிவுரை கூறுவது அல்ல என்ற முதலாளித்துவ மையக் கருத்தைத் தெளிவாக உணர்த்தி இருக்கிறார்.

ஒரு பொருளை / செய்தியை அதன் உண்மைத் தன்மையில் புரிந்து கொள்ள மறுக்கத் தொடங்குவது தான் உளவியல் நோயின் தொடக்கம் ஆகும். உலகின் விவரம் அறிந்த மக்கள் அனைவரும் இன்றைய பொருளாதார நடைமுறை தான், புவி வெப்ப உயர்வுக்கும், சுற்றுச் சூழல் கேட்டுக்கும் இட்டுச் சென்று கொண்டு இருக்கிறது என்பதை உணர்ந்து இருக்கின்றனர். ஆனால் இந்த முதலாளித்துவவாதிகள் மட்டும் இதைப் புரிந்து கொள்ளவே மாட்டோம் என்று அடம் பிடிக்கின்றனர் என்றால் அவர்களுக்கு உளநோய் உச்ச கட்டத்துக்குப் போய் விட்டது என்று புரிந்து கொள்ளலாம்.

உளநோய் உச்ச கட்டத்தில் உள்ளவர்களின் வழிகாட்டுதலில் சமூகம் இயங்கிக் கொண்டு இருந்தால், இப்புவியின் அழிவுப் பயணத்தின் வேகம் அதிகரிக்கவே செய்யும். ஆகவே உளநோய் உச்ச கட்டத்தில் உள்ள முதலாளித்துவத்தை உடனடியாகக் காவு கொடுப்பது அனைத்து மக்களின் இன்றியமையாத கடமையாகும்.

உளநோய் உச்ச கட்டத்தில் உள்ள முதலாளித்துவத்தைக் காவு கொடுத்த பின், அவ்விடத்தில் அரை குறை உளநோயாளிகள் ஆக்கிரமித்து விடாமல், உழைக்கும் மக்களின் நலன்களை மட்டுமே முன்னெடுக்கும் ஆரோக்கியமான உளவியல் தன்மை கொண்ட நிகரமை (சோஷலிச) முறையை அமர்த்த வேண்டியது அனைத்து மக்களின் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

cM
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



DFSK Unimo பெரியவன் DFSK

எனது வாகனம் யுனிமோ பெரியவன். நிறைய இடவசதி.
1500 கிலோ வரை பொருட்கள் ஏற்றலாம்.
ஒரே முறையில இரண்டு லொறி பொருட்களை கொண்டு போகவும் முடியும்.
லீற்றருக்கு கிலோ மீற்றர் 22க்கும் அதிகமாக போக முடியும்.
1300 சீ சீ சிலிண்டர் 3 என்ஜின் இருக்கிறதால,
எவ்வளவு பாரமும் எந்த மேட்டிலயும் இழுக்கும்.
சஸ்பென்சன் திறம். டிஸ்க் பிரேக் இருக்கிறதால, பிரேக் ஹுவர்.
உதிரிப்பாகங்கள் விலை குறைவு.
சேர்விஸ் சென்டர்கள் எல்லா இடத்திலும் இருக்கு.
இந்த வியாபார நிறுவனத்திற்கு வாகனம் சம்மந்தமாக 70வருட அனுபவம் இருக்கு.
அதனால யுனிமோ பெரியவன் எனக்கு நம்பிக்கையானது.



இலாபம் மோ - வாசி மோ

விஸ்வாசமும் மோ

யுனிமோ பெரியவன்



Unimo

விஸ்வாசமும்.வாசியும்

**Orient Motor Company Limited**
(யுனைட் மோட்டர்ஸ் லங்கா பி எல் சீ யின் இணை நிறுவனமாகும்)
இல.100 ஹைட் பார்க் கார்னர் கொழும்பு - 2

அவசர அழைப்பு **0768 303 086**

விலை ரூபா. 899,000/-* இருந்து

டீசல்

நிபந்தனைக்கு உட்பட்.

www.unitedmotors.lk

அபான்ஸிடமிருந்து

# முக்கிய அறிவித்தல்

அபான்ஸ் **LG வளிச்சீராக்கிகளுக்கான இலங்கையின்** அனுமதிப்பெற்ற **ஒரே விற்பனை பிரதிநிதியாக** அபான்ஸ் மட்டுமே செயற்படுகின்றது என்பதனை தெரிவிக்க விரும்புகின்றோம்.

இலங்கை முழுவதுமான அசல் **LG** வளிச்சீராக்கிகள் **அபான்ஸ் காட்சியறைகள் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் மட்டுமே** பெற்றுக்கொள்ளலாம்.

**LG** வளிச்சீராக்கிகளை விற்பனை செய்வதற்கு **வேறு தரப்பினரோ** அல்லது **"வேறு விற்பனை முகவர்களோ இல்லை"** அத்துடன் **www.buyabans.com** இணைய வலையமைப்பினை தவிர்ந்த ஏனைய வலையமைப்புக்கள் விற்பனையில் ஈடுபடமாட்டாது.

இதனால் சட்டவிரோதமான கொள்வனவாளர்களினால் பெற்றுக்கொள்ளப்படுகின்ற அல்லது வேறு தரப்பினரால் பெற்றுக்கொள்ளப்பட்ட **LG** வளிச்சீராக்கிகள் தொடர்பாக **அசல் அபான்ஸ் உத்தரவாதம்** கிடைக்கப்பெறாது எனவும் தொழில்நுட்ப கோளாறுகளின் போது அபான்ஸ் நிறுவனம் பொறுப்பேற்காது என்பதனை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**அபான்ஸ் குழுமம்**
498, காலி வீதி,
கொழும்பு-03

வாங்கும் முன் சிந்தியுங்கள்.

Abans

Whirlpool® HOME APPLIANCES



உங்களுடைய நேரத்தை சேமிக்கும்



சமையல் புத்தகம் ஒன்று
இலவசம்



மெஜிக்குக் 20S
- 800W வலு
- 20L கொள்ளளவு
- டச் foil கட்டுப்பாடு
- குழந்தை பாதுகாப்பு

ரூ.11,000



மெஜிக்குக் 20G - க்றில்
- 20L கொள்ளளவு
- 800W வலு
- க்றில் தொழிற்பாடு
- பல்வேறு நிலை சமையல்

ரூ.13,000



மெஜிக்குக் 20C - கன்வெக்சன்
- 20L கொள்ளளவு
- 800W வலு
- கன்வெக்சன் தொழிற்பாடு
- பல்வேறு நிலை சமையல்

ரூ.16,100

அழைப்புகளுக்கு 0714020799

நாடுபூராகவும் அபான்ஸ் மற்றும் அபான்ஸ் அன்லிமிடட் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளலாம்

Abans


இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ... ஸ்தாபனத்தால். 2015 ஜூலை 29ஆம் திகதி வெளியிடப்பட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org